# சைவத் திருமுறைத் திரட்டு



சிவதொண்டன் சபை
யாழ்ப்பாணம்



அருள்மிகு தன்னை சித்தி விநாயகர் ஆலயத்தில் திருமுறை முற்றோதல் 11-03-2012 தொடங்கி 19-03-2012 நிறைவு பெற்றது. அன்று திருமுறை ஓதிய அடியார்கள் திரு/~~திருமதி~~ க. நடராஜா அவர்கட்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பரிபாலன சபை,
தன்னை சித்தி விநாயகர் ஆலயம்,
காரைநகர்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவத் திருமுறைத் திரட்டு

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

சிவதொண்டன் சபை
யாழ்ப்பாணம்
27-08-2011

முதற் பதிப்பு 1983
இரண்டாம் பதிப்பு 1990
மூன்றாம் பதிப்பு 1995
நான்காம் பதிப்பு 2002
ஐந்தாம் பதிப்பு 2011

ISBN: 978-955-0074-08-2

வெளியீடு: சிவதொண்டன் சபை,
434, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

பதிப்புரிமை: சிவதொண்டன் சபை, © 2011

அச்சுப் பதிப்பு: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,
320, செட்டியார் தெரு,
கொழும்பு

உ

சிவமயம்

# பதிப்புரை

"தேவர் பிரான்பழி தீர்த்தாய் கூடலில்
சேவக னாகக் குதிரை செலுத்தினை
மூவர் தமிழ்மொழி கேட்டுகந் தாய்முன்
காவல னாகவும் நடித்தனை நீயே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்"

மூவர் தமிழுடன் மற்றும் திருமுறைவாணர்களின் தமிழ் மாலைகளையும் சிறு திரட்டாகத் திரட்டிய இத்திருநூலை ஐந்தாவது பதிப்பாக மீள்பதிப்புச் செய்கின்றோம்.

எங்கள் குருநாதன் அவ்வப்போது பாடி மகிழ்ந்த இவ்வருட்பாக்களை அன்பர்கள் நாடோறும் பாடி மகிழும் நலம் பெறுவார்களாக.

**சிவதொண்டன் சபையார்**

27-08-2011

உ

## பதிப்புரை

### சைவத் திருமுறைப் பாடல்கள்

திருவருளை ஒப்புக்கொண்டோ, நம்பியோ பாடிய பாடல்கள் வேறு. திருவருளைப் பெற்றுத் திருவருளோடு கலந்து நின்று பாடிய பாடல்கள் வேறு. ஆதலால் தேவார திருவாசகங்களோடு ஏனைய சமயப் பாடல்களை ஒப்பிடக் கூடாது. அவை தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தன. மக்களனைவரும் திருவருளைப் பெறவேண்டும் என்னும் விழுமிய நோக்கம் காரணமாகத்தான் இறைவன் தமிழில் தேவார திருவாசகங்களைத் தோற்றுவித்தான். நமக்கு வரும் துன்பங்களைத் துடைத்து இன்பத்தையும் அமைதியையும் வழங்குவதில் சைவத் திருமுறைப் பாடல்கள் ஈடும் எடுப்பும் அற்றன.

இறைவழிபாடு, தன்னைப் பற்றிய வேண்டுதல்,பிறர் பற்றிய வேண்டுதல், ஆராதனை, தியானம் என நான்கு வகையாகும். துன்ப நீக்கம் அல்லது இன்ப ஆக்கம் ஆகிய இவற்றில் ஏதாவதொன்றைத் தனக்காகவோ பிறருக்காகவோ பிரார்த்தனை செய்தல் முதலாவதான வேண்டுதல் பகுதியாகும். கடவுளைப் பற்றியோ அல்லது மனித வடிவில் வந்த கடவுள் அவதாரங்களைப் பற்றியோ பக்தி பூர்வமான கிரியைகளால் அறிவு, உணர்வு, விருப்பம், கற்பனைத் திறங்கள் செறிய ஆராதிப்பதே இரண்டாவதான ஆராதனையாகும். இறைவனுடைய அருள்வெளிக்குள் செல்லத் தன்னைத் தயார் செய்து கொண்டு, தனது உள்ளும் புறமும் அருள் எல்லையாகவே இருக்கும் படி செயலற்ற மௌன நிலையில் விழிப்புடன் இருக்கும் உயர்ந்த நிலை மூன்றாவதான **தியானம்** எனப்படும். இந்த இலக்கணத்திற்கு நேர் இலக்கியங்களாக அமைந்து விளங்குவன தேவார திருவாசகங்களாகும். ஆன்மாக்களை இறைவன் திருவருளில் ஈடுபடச் செய்யும். பேராற்றல் இவைகளுக்குண்டு

வேறு எச்சமயத்திலும் இல்லாத அளவுக்கு இவை விரிந்திருப்பதனால் இவற்றை முழுவதும் நாடோறும் பயிலுவது இயலாததாகையால், நாடோறும் ஓதுதற்கு ஏற்ற சில பகுதிகளை மட்டும் தொகுத்துள்ளோம்.

பல்வேறு சந்தங்கள், புராண வரலாறுகள், தலத்தின் சிறப்புக்கள், இயற்கைக் காட்சிகள், தத்துவ உண்மைகள், ஆன்ம வாழ்வின் அவல நிலைகள், அந்நிலை பற்றிய முறையீடுகள், அவற்றினின்றும் விடுபடும் வழிகள் என்னும் இவற்றின் கருவூலமாக அமைந்த பாடல்களை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் பேர் விருப்பத்தினாலேயே எங்கள் குருநாதன் யோகசுவாமிகளின் ஆணை வழி நின்று இந்தத் திரட்டினை வெளியிடுகின்றோம்.

உலகில் வேறு எம் மொழிக்கும் இல்லாத தனிப் பெரும் செல்வமாகத் திருமுறைகள் தமிழ்மொழிக்கு அமைந்துள்ளன. பெறுதற்கரிய செல்வத்தைப் பேணிக்காப்பது எம்மனோர் கடமையே. பொருள் புரியாது இசைக்கு மட்டும் இசையும் ஏனைய மொழிப்பாடல்களைப்பாடியாடாது செந்தமிழ்மக்கள் மொழிக்கு மொழி தித்திக்கும் நால்வர் பாடல்களையும் நாளும் பொருளுணர்ந்து பாடிப் பணிந்து ஈடேறுவார்களாக.

434, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

சிவதொண்டன் சபை

உ

சிவமயம்



ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத் தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின்உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து 55

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆநந்தத் தழுத்தி என் செவியில் 60

எல்லை யில்லா ஆநந் தம் அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி 66

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே! 72

விநாயகர் அகவல் முற்றிற்று.



திருச்சிற்றம்பலம்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்கு
ஆனந்தக் கூத்தாட ஆடரங் கானதே.

ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே.

திருச்சிற்றம்பலம்



## திருப்பள்ளியெழுச்சி

நற்சிந்தனை

அன்னை தந்தையர் மைந்தர்கள் ஒருபால்
அருமைசேர் சோதரர் உறவினர் ஒருபால்
பொன்னணி சிறுமியர் சிறுவர்கள் ஒருபால்
புகழ்பவர் இகழ்பவர் போபவர் ஒருபால்
சென்னியி லஞ்சலி கூப்பினர் ஒருபால்
தேசத்தில் திரிந்து இரப்பவர் ஒருபால்
கண்ணிணை கண்டு களிக்கச்செய் பரனே
கடவுளே யென்னுள்ளம் எழுந்தரு ளாயே.

வேதமந் திரஞ்சொல்லும் வேதியர் ஒருபால்
வேள்விகள் செய்ய விழைபவர் ஒருபால்
பூதபௌ திகங்களை ஆய்பவர் ஒருபால்
புகைவண்டி யமைக்கும் பொறற்பினர் ஒருபால்
கீதத்தைப் பரவச்செய் யாழினர் ஒருபால்
கேட்டு மகிழ்ந்திருக்கும் கிழவர்கள் ஒருபால்
ஈதனைத்துஞ் செய்துஞ் செய்யாம லிருக்கும்
இறைவனே யென்னுள்ளம் எழுந்தரு ளாயே.

- சிவயோக சுவாமிகள்

| பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன்கழல் போற்றி | ஆழிமிசைக்கன் மிதப்பில் அணைந்தபிரானடி போற்றி | வாழிதிருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி | ஊழிமலிதிருவாதவூரர் திருத்தாள் போற்றி |
|---|---|---|---|
|  |  |  |  |
| **சீகாழித் தேவருக்கு மங்களம்** | **திருநாவுக்கரசருக்கு மங்களம்** | **சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்** | **திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்** |

உ

## சைவசமயகுரவர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

## சைவசமயகுரவர் திருநட்சத்திரம்

சித்திரைச் சதயம் அப்பர், சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம் பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

## சைவசமயகுரவர் வயது

அப்பருக் கெண்பத்தொன்(று) அருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்(கு)
அந்தம் பதினா றறி.

## 1. சம்பந்தர் பாடலின் அற்புதம்

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே -
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

2. அப்பர் சுவாமிகள் பாடலின் அற்புதம்

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழல்கொள் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் ஆனை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிடந் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவுதானுங் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லும் மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.

3. சுந்தரர் பாடலின் அற்புதம்

வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட நிற்குமே
செங்கல் லானது தங்கம தாக்குமே
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே

4. திருவாதவூரர் பாடலின் அற்புதம்

பெருக்கும் வையை தனை அழைப் பிக்குமே
பிரம்படிக்குப் பிரான் மேனிகன்றுமே
நரியை வாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பே சுவிக்குமே
பரிவிற் பிட்டுக்குமண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழு தக்கோ வைபாடுமே
வருகம் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.

- தனிப்பாடல்கள்

# பொருளடக்கம்

இத்தொகுதியுள் பன்னிரு திருமுறைகளிலிருந்து தெரிந்தெடுக்கப் பெற்ற தனிப்பாடல்கள் பலவற்றோடு பின்வரும் சில திருப்பதிகங்கள் முழுமையாகவும் தரப்பெற்றுள்ளன.


**முதலாந் திருமுறை** 1-20
தோடுடைய 1
திருப்பாச்சிலாச்சிராமம் 4
திருநெடுங்களப் பதிகம் 8
திருநீலகண்டப் பதிகம் 14
ஏகபாதம் 16
திருவெழுகூற்றிருகை 18

**இரண்டாந் திருமுறை** 21-37
திருநீற்றுப் பதிகம் 23
கோளறு பதிகம் 26
திருக்கேதீச்சரப் பதிகம் 33

**மூன்றாந் திருமுறை** 37-58
திருப்பூந்தராய் (அருச்சனை) 38
திருவாவடுதுறை 40
பஞ்சாக்கரத் திருப்பதிகம் 43
நமச்சிவாயத் திருப்பதிகம் 47
திருப்பாசுரம்
திருக்கோணமலை 50
திருநல்லூர்ப்பெருமணம் 58

**நான்காந் திருமுறை** 60-89
கூற்றாயினவாறு 60
திருவங்கமாலை 64
நமச்சிவாயத் திருப்பதிகம் 66
விடந்தீர்த்த திருப்பதிகம் 69
திருவாதிரைத் திருப்பதிகம் 70

**ஐந்தாந் திருமுறை** 81-89
கோயில் - பனைக்கை 81
மாசில் வீணையும் 86
பாவநாசத் திருக்குறுந்தொகை 88

**ஆறாந் திருமுறை** 90-125
திருவடித் திருத்தாண்டகம் 91
போற்றித் திருத்தாண்டகம் 99
போற்றித் - வேற்றாகி 104
போற்றித் - பொறையுடை 108
போற்றித் - பாட்டான 110
நின்ற திருத்தாண்டகம் 116
தனித்திருத் - அப்பன் நீ 119
எண்ணுகேன் என்சொல்லி 122

**ஏழாந் திருமுறை** 127-156
பித்தாபிறைசூடீ 127
திருத்தொண்டத் தொகை 131
நமச்சிவாயத் திருப்பதிகம் 135
அந்தணாளனுன் 138
ஆலந்தானுகந் 142
திருக்கேதீச்சரப்பதிகம் 148
திருக்கழுக்குன்றப்பதிகம் 149
மீளா அடிமை உமக்கே 153
தானெனை முன்படைத் 155

**எட்டாந் திருமுறை** 158-214
திருவாசகம்
சிவபுராணம் 158
கீர்த்தித்திருவகவல் 162
திருவண்டப்பகுதி 167
போற்றித்திருவகவல் 173
திருவெம்பாவை 182

திருப்பொற்சுண்ணம் 189
திருப்பொன்னூசல் 196
திருப்பள்ளியெழுச்சி 198
கோயில் மூத்த திருப்பதிகம் 201
கோயில் திருப்பதிகம் 204
கண்டபத்து 209
திருச்சிற்றம்பலக்கோவை 214

**ஒன்பதாந் திருமுறை** 216-220
திருவிசைப்பா 216
திருப்பல்லாண்டு 219

**பத்தாந் திருமுறை** 221-222
திருமந்திரம் 221

**பதினொராந் திருமுறை** 223-239
திருமுருகாற்றுப்படை 225

**பன்னிரண்டாந் திருமுறை**
பெரிய புராணம் 240-243

**பிற்சேர்க்கை 1**
ஈழத்துத் திருப்புகழ்
கதிர்காமம் 244

**திருகோணமலை** 244-246
கந்தவனம் 247
நல்லூர் 248

அத்துவிதப்பொருள் 249

**பிற்சேர்க்கை 2**
பன்னிரு திருமுறைகள்
பற்றிய குறிப்புகள் 250

பாட்டு முதற் குறிப்பு 258

உ

## திருமுறைப் பாராயணம்

சிவபெருமான் சமயகுரவராகிய சற்குரு மூர்த்தங்கொண்டு அருளிச் செய்ததே சைவத் திருமுறையாகும். இத்திருமுறை தமிழ் வேதமென வழங்குகிறது திருமுறையைக் கோயிலில் எழுந்தருளுவித்துப் பூசனை இயற்றுதலும் திருவிழா எடுத்தலும் சிறந்த புண்ணியம்.

திருமுறை இறைவனின் மந்திர ரூபமாதலால் புனிதமான ஓரிடத்தில் வைத்துப் பக்குவமாய்ப் பேணுதல் வேண்டும். சைவ ஆசாரம் பொலியும் புறக்கோலத்துடன் உள்ளமும் தூயராயத் தொழுது திருமுறையைக் கையிலேந்துதலே முறையாகும்.

"திருமுறைப் பாராயணத்துக்கு முன்னர் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாக வேனும் உட்கார்ந்து விநாயகரைத் தியானித்து சிவபெருமானையும் உமாபிராட்டியாரையும், சமயபரமாசாரிய சுவாமிகள் நால்வரையும், திருத்தொண்டர் சீர்பரவுவாராகிய சேக்கிழார் நாயனாரையும் சிந்தித்து ஒவ்வொரு திருப்பாட்டின் முதலிலும் முடிவிலும் (திருச்சிற்றம்பலம்) என்று சொல்லுக"

- சுவாமிநாத பண்டிதர்

## திருச்சிற்றம்பலம்

"திருச்சிற்றம்பலம்" என்பது உலகத்தில்வெளிப்புறத்தில் நடு இடமாகிய சிதம்பரத்தைக் குறிப்பிடுவது போல உடம்பின் உட்புறத்தில் நடு இடமாகிய இதயத்தையும், அதோடு தொடர்புடைய நடு நாடியையும் குறிப்பிடுகின்றது. எனவே திருச்சிற்றம்பலம் என்று உணர்ந்து சொல்லும்போது நம் உணர்வு, இதயம், நடுநாடி, அதன் வழியே மூளை ஆகிய இடங்களுக்குப் போய்ச் செழுமை பெறுகின்றது. அதன் பயனாக நன்கு பாடவும் பாடியதை மேன் மேல் உணரவும் முடிகிறது. எனவே "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லி உணர்ச்சியை ஒருமுகப்படுத்திக் கொண்டும் செழுமையாக்கிக் கொண்டும் பதிகத்தைத் தொடங்க வேண்டும்.

- அழகரடிகள

திருச்சிற்றம்பலம் என்பது திருவருள் வெளியாதலின் அதனைச் சொல்லுதலும், நினைத்தலும் தமிழ் மறைகள் அவ்வருள் வெளியினின்றும் தோன்றிய அருளொலிகள் என்னும் உணர்வை நிலை பெறுத்துவனவாகும்.

திருச்சிற்றம்பலம் திருமுறைகளைப் பேணிப்பாதுகாத்துத் தந்த திவ்விய சந்நிதியாதலாலும் முயற்சி இல்லாமலேயே மனம் ஒடுங்குமிடமாதலாலும், திருச்சிற்றம்பலம் எனத் திருமுறைப்பாராயணம் முதலிலும் முடிவிலும் கூறும் முறை பேணப்படுகின்றது.

திருமுறை ஓதும்போது "பண்ணாரப்பாட" வேண்டும். "பண்ணாரப்பாட வல்லார்க்கில்லைப்பாவமே (சம்பந்தர்)" பன்னிருதிருமுறைகளும் நிரல்பட அமைந்துள்ளன. அந்த வரிசைக் கிரமப்படி ஓதுதலே முறை.

உ
சிவமயம

# சைவத் திருமுறைப் பெருமை

திருச்சிற்றம்பலம்

"விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும்
மண்ணினார் மறவாது சிவாய வென்
றெண்ணினார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத்துறை யரே"

## 1) தமிழ் வேதம்

வேதம், வேதவிளக்கமான சிவாகமம் என்னும் இவ்விரண்டும் சைவசமய முதனூல்களாகக் கொள்ளப்படுகின்றன. இவ்விரண்டும் இறைவனால் அருளப் பெற்றவை. இவை போன்றே சைவத்திருமுறையும் இறைவனால் அருளப் பெற்றதாகும். இறைவன் சம்பந்தப்பிள்ளையார் ஆதிய சற்குரவர்களை அதிட்டித்து நின்று சைவத்திருமுறையை அருளிச் செய்தனர். இஃது **எனதுரை தனதுரையாக** ஆதிய தேவார மொழிகளால் நன்கு தெளிவாகும். அன்றியும் 'பித்தன்' எனவும், தில்லை வாழந்தணர் எனவும், **உலகெலாம்** எனவும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்தமையும், திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றைத் தம் கைப்படஎழுதிக் காப்புச் செய்து கனகசபைக் கண்ணே வைத்தமையும் ஆதிய இவையெல்லாம் சைவத்திருமுறை இறைவனது அருளிப்பாடு என்பதை உணர்த்தும் குறிப்புக்களேயாம். இறைவனது அருளிப்பாடான திருநெறிய தமிழ் ஆதலாலே சைவத்திருமுறை 'தமிழ்வேதம்' என வழங்கப் பெறுகிறது. இவ்வழக்கு

"தமிழ் வேதம் பாடினார் தாளம் பெற்றார்"
"மிக்க சொற்றமிழினாலே வேதமும் பாடினார்"
"எழுதுமாமறையாம் பதிகத் திசை போற்றி"
"பன்னு தமிழ் மறையாம் பதிகம் பாடி"

எனப் பலகாலும் பயின்றுவரும் செந்தமிழ் வழக்காற்றால் தெள்ளிதின் உணரப்படும். அன்றியும் ஆரியவேதத்து இருதயத்தானமாக அஞ்செழுத்து மந்திரம் அமைந்திருப்பதுபோல தமிழ்வேதத்து இருதயத் தானமாகவும் அவ்வஞ்செழுத்து மந்திரமே பொதிந்திருப்பதும் அரியதோர் ஆதாரமாம். மேலும் 'த' கர ஒற்றூர்ந்த 'ஓ' காரத்தில் தொடங்கி 'ம' கர ஒற்றில் நிறைவுறும் சைவத் திருமுறையானது ஓம் எனும் பிரணவ விரிவாய் அமைந்திருப்பதும் தக்க சான்றேயாகும். இன்னும் தமிழ் வேத வியாசரான நம்பியாண்டார் நம்பி, மந்திரங்கள் எழுகோடியாதல் பற்றி தேவாரங்களை ஏழுதிருமுறைகளாக அடைவுசெய்தார் என்ற கருத்து அவர் அதனை ஓர் வேதம் தொகை செய்யும் கைங்கரியமாகவே செய்தனர் என்பதற்கான ஆதாரமாம். இன்னோரன்ன காரணங்களால் இருமொழி வேதங்களையும் ஓதியுணர்ந்த உவத்தல் காய்தலற்ற உத்தமர் ஆரியவேதத்துக்கு இணையான தமிழ் வேதமெனவே சைவத்திருமுறையினைக் கொள்வர்.

**2) வேதசாரம்**

நான்மறையிலும் இறைஞானம் மறையாகவே உளது. இ்து "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்ற மணிவாசகத்தில் நுட்பமாக உணர்த்தப் பெற்றிருக்கிறது. மறையுள் மறையாயுள்ள மறையோனை ஆகமங்கள் ஒருவாறு வெளிப்படக் காட்டி நிற்கின்றன. "ஆகமமாகி நின்று அண்ணிப்பான்" எனும் திருவாசகம் இதனைத் தெளிவுறுத்தி நிற்கிறது. ஆனால் ஆகமங்கள் கோடிக்கணக்கான கிரந்தங்களால் அமைந்து ஒருவரது ஆயுட்காலத்தில் ஓதியுணர ஒண்ணாதவாறு விரிந்து கிடக்கின்றன. அன்றியும் ஆகமங்களை ஓதுதற்கு அதிகாரிகளாகும் தகைமை சிலருக்கே வாய்ப்பதாகும். ஆதலால் கருணைக்கடலான சிவபெருமான்

---

* சதுர் வேதங்களுள்ளும் வேதத்திரயி என வழங்கும் மூன்றனுள் நடுநின்றது யசுர் வேதம். அதன் நான்காவதாக நடுக்காண்டத்து நடுச்சங்கிதையின் நடுவே பிரிருத்ராத்யாயம் எனும் சதருத்தியம் உளது. அதன் நடுவே "நமசிவாய" எனும் பஞ்சாக்கரமந்திரம் மிளிர்கிறது. பன்னிரு திருமுறையுள்ளும் அடங்கன்முறை எனச் சிறப்பிக்கப்பெறும் தேவாரத்திலே நடுநின்ற அப்பர்தேவாரத்து நடுநின்ற ஐந்தாம் திருமுறையின் நடுப்பதிகம் திருப்பாலைத்துறைத் திருக்குறுந்தொகை அப்பதிகத்து நடுவண் 'சிவாய' எனும் முத்திபஞ்சாக்கரம் பொதிந்துள்ளது.

சைவநாயன்மார்களை அதிட்டித்து நின்று வேத விழுப்பொருளைப் பல்லோரும் தெள்ளிதின் அறிந்து பயன்பெறும் பொருட்டு வேதசாரமான திருமுறையாக அருளிச் செய்தனர். இத்திருமுறையானது ஆரியவேதத்துள் தோன்றாப் பெருமையானாக நிற்கும் இறைவனைப் "பெம்மானிவனன்றே" எனக் குறித்துக் காட்டி நிற்கின்றது. இறைவனது குறிகளும், அடையாளங்களும், அவனுறையும் கோயிலும், அவனை அறியும் நெறிகளும், அறிந்தோர் காட்சியுள் திருந்த நின்ற அவன் நேர்மையும் ஆதிய எல்லாவற்றையும் நால்வேத அளவாக அன்றி ஆயிரமாயிரம் ஆரண அளவாய்ப் பறையறைந்து தெரிவிக்கின்றது.

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே"

எனும் அப்பரடிகளது திருக்குறுந்தொகையை ஊன்றி நோக்கி உளங் கொள்வோர் இதனைத் தெளிவாக அறிந்து கொள்வர். சைவத்திருமுறையிலே இறைவன் "முன் நிற்கும்" திறத்தை நோக்க அதனை இறைவனின் மந்திரரூபமெனக் கொள்ளுதல் அழகிதே எனத் தோன்றும் திருமுறையைத் திருக்கைக்கோட்டியில் எழுந்தருளிவித்துப் பூசைவழிபாடுகள் செய்த பண்டையோர் பண்பாட்டை நயத்தலும் பொருந்தும். இத்தகைய அருமைப்பாடுடைய திருமுறை பல்லோரும் அறியும் வண்ணமான பயிலுந்தமிழில் அமைந்த எளிமையும் அழகிதே. அது பண்சுமந்த பாடல்களாய், பாமரருக்கும் பழக்கமான பாவடிவங்களில் இயன்றதாய் அமைந்திருக்கிறது. மொழிக்கு மொழி தித்திக்கும் இன்சொற்களால் கல்லாமனத்துக் கடையரையும் கருணைவெள்ளத்தழுத்தி வினைகடியவல்ல இரசகுளிகையாக அமைந்திருக்கிறது. இத்தகைய அருமையில் எளிய அழகை நோக்க வேதாகமங்களிலும் வேதசாரமான சைவத்திருமுறை விழுமிதெனும் துணிபு

---

* முதல் திருமுறை தோடு எனும் மங்கலச் சொல்லுடன் தொடங்குகிறது (தோடு - தோ - த் + ஓ) பன்னிரண்டாம் திருமுறை நின்றதெங்கும் நிலவி உலகெலாம் - (ம்) என நிறைவுறுகிறது. சுவாமிநாத பண்டிதரது தேவாரம் அடங்கன் முறைப் பதிப்பின் முன்னுரை பார்க்க

தோன்றுதலியல்பே. இத்துணிபினாலேயே முன்னோர் வேதம் பசுவெனவும், ஆகமம் அப்பசுவின் பாலெனவும், சைவத் திருமுறை அப்பாலின் நெய்யெனவும் ஒப்புவமை கூறினர்.

**3) தமிழ் மந்திரம்**

வேத சுலோகங்களை வேத மந்திரம் என்பது போலத் திருமுறைப் பாமாலைகளைத் தமிழ் மந்திரம் என்பது வழக்காறாகும். திருவருட்சத்தி உள்நின்று உந்த நிறை மொழிமாந்தரான நாயன்மார் அருளிச் செய்த ஆணைமொழிகளாதலாலே இவற்றைப் பெருமந்திரங்கள் எனல் சாலப்பொருந்துவதே. அருளிக் கூறிய இவ்வாணை மொழிகள் நாயன்மார்களது திருவாய் மொழிகளாக மலர்ந்த அப்பொழுதே அவ்வப்பயன்களைத் தவறாது தந்தன. ஆளுடையபிள்ளை "இடரினும் தளரினும்" பாடப் பொற்கிழி கிடைத்தது. ஆளுடையரசு "ஒன்று கொலாம்" பாட அப்பூதிஅடிகளின் பிள்ளை உயிர்பெற்றெழுந்தது. ஆளுடைய நம்பி "மீளா அடிமை" பாடி மற்றைக்கண் பெற்றார். இத்தகைய அருட்பேற்றைக் கண்டே

"புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டிலடைக்குமே
பனையிலாண்பனை பெண்பனையாகுமே
பழைய என்பு பொற்பாவைய தாகுமே
சினவரா விடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப்பாடலே"

ஆதிய பாடல்களைப் புலவோர் பாடினார். இவ்வருளாற்றல் தீயினிற் சூடு போல் திருமுறைப்பாக்களில் என்றுமுள்ளன. அச்சுதகளப்பாளர் திருவெண்காட்டுத் திருப்பதிகம் ஓதி மெய்கண்டதேவரை அருந்தவப்புதல்வராய்ப் பெற்றமை பிரபலமானதே. இவ்வண்ணம் ஆளுடைய பிள்ளையாரின் ஆணைமொழிகள் பலித்ததைக் கண்ட நம்முன்னோர் அவரை "ஆணைநமதென்றபெருமான்" எனப் போற்றினர். மூவர் தேவாரங்கள் கைகண்ட மந்திரங்களாதல் பற்றியே உமாபதி சிவாச்சாரியாரும்

"கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்
கை காணா மந்திரம் கண்ணுதலோன் கூறல்"

என உறுதி கூறினர். ஆவடுதுறை அரனின் முன்னிலையிலே சம்பந்தப் பிள்ளையார் திருப்பதிகமோதிப் பொற்கிழி பெற்றது போன்றே கொழும்புத்துறை அடிகளின் முன்னிலையில் நாகலிங்கப்பரதேசியார் அத்திருப்பதிகமோதிப் பொன் முடிப்புப் பெற்ற அற்புதம் அண்மைக்காலத்தில் நிகழ்ந்ததாகும். சிவயோகசுவாமிகள் இத்தகையதோர் அருளாடலால் திருமுறையின் அருள்மாட்சியை நம்மனோருக்கு ஞாபகப்படுத்தினர். தமிழ் மந்திரங்களின் தலையாய பேறு திருவடிப்பேறே. அவை வினைகெடுத்துச் சிவகதி அருளும் திறம் அவற்றின் திருக்கடைக்காப்புகளில் பலகாலும் கூறப்பெற்றிருக்கிறது.

"திரு நெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"
"பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே"
"பாடலாயின பாடுமின் பத்தர்காள் பரகதி பெறலாமே"
"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்"
"செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்"

ஆதிய வாசகங்கள் இதற்கான சான்றுகளாம். ஆதலால் பந்தம் நீங்கி வீடுசேர நாடியோரெல்லாம் இத்தமிழ் மந்திரங்களைக் காதலித்தோதினர். அருணகிரிநாதர் ஆளுடையபிள்ளையை முருகப்பெருமானெனவும் அவர்தம் ஆணைமொழிகளை அமிர்தகவித்தொடை எனவும் கொண்டாடினார். தாயுமான சுவாமிகள் மொழிக்கு மொழி தித்திப்பான மூவர் பாடல்களில் ஈடுபாடுகொண்டு

"அற்றவர்கட் கற்றசிவன்" ஆம் என்ற அத்துவித
முற்றுமொழி கண்டருளில் மூழ்குநாள் எந்நாளோ"

"இருநிலனாய்த் தீயாகி" என்ற திருப்பாட்டின்
பெரு நிலயைக் கண்டறிந்து பேச்சறுவ தெந்நாளோ"

"தானெனை முன்படைத்தான் என்ற தகவுரையை
நானென்னா உண்மை பெற்று நாமுணர்வ தெந்நாளோ"

என்றவாறு போற்றியுள்ளனர். முன்னோர் போலவே எங்கள் சுவாமிகளும் முத்தி நல்கும்மந்திரங்களெனப் போற்றியுள்ளார். இத்திருநூலில் திரட்டப் பெற்றுள்ளபாடல்கள் யாவும், சிவயோக சுவாமிகள் தம்மை நாடிவந்த அன்பர்கள் நலம்பெறும் பொருட்டு அவ்வப்போது தம் நினைவினின்றும் கூறிய தமிழ்மந்திரங்களேயாம்.

4) பைசந்தி வாக்கு

சைவத்திருமுறையின் திருமொழிகள் நால்வகை வாக்குகளில் பைசந்தி வாக்குகளாம். அ்.தாவது அவை உணர்வு சூழ் கடந்ததோர் உணாவு மொழிகள் என்பதாம். பாலபாடம் பயிலும் சிறுவன் எழுத்துக் கூட்டிச்சொல்லும் அம்மா எனும் மொழியும், இறுதி மூச்சுவிடும் அன்னையின் முன்னிலையில் அன்புருவாய் நிற்கும் மைந்தனது அகத்தே உன்னும் அம்மா எனும் மொழியும் ஒரு நிறையினவோ? எல்லா உயிருக்கும் அம்மையும் அப்பனுமாயிருக்கும் "மாணிக்கத்தை" மற்றொன்றையும் நினையாத நினைவினின்றும் கூறும் "அன்னே" எனும் வாக்கு அம்மைந்தனது அம்மா எனும் மொழியினும் பொருளாழம் மிக்கதன்றோ! இத்தகைய ஆழ்ந்தகன்று நுண்ணிய பொருளுணர்ச்சி பொருந்தினவே திருமுறைவாக்குகள். ஆதலாலேதான் விற்பனப்புலவோர் எவ்வாறு தான் செப்பமாகத் தமிழ் மந்திரங்களைப் போன்ற பாக்களை யாத்தாலும் அவற்றிற்குத் தமிழ் மந்திரங்களைப் போன்ற ஆற்றல் இருப்பதில்லை. நாயன்மார்கள் நயனநீர்மல்க வாய்குழறக் கூறிய மதுரவாக்குகளை மற்றையோரது வைகரிவாக்குகள்போல மதித்தல் கூடாது. அவற்றைப் பல்காற் பாவித்துப் பாவித்துப் பயின்ற நலத்தால் நெக்கு நெக்கு உள் உருகி நினையும் நெஞ்சினாலேயே உணர்தலாகும். இவ்வாறு மெய்ப்பொருளுணர்ந்து சொல்லுவார் சிவனடிக் கீழ் உள்ளார் என்பது முழுது முண்மையே.

5) மறுமலர்ச்சிக்கான உயிர்ப்பு

நம்முன்னோரது வரன்முறையை நோக்குமிடத்து நம்மவரது மலர்ச்சியான வாழ்வுக்கும், திருமுறைப்பயிற்சிக்குமுள்ள இயைபு தெற்றெனத் தெரியும். சைவத்திருமுறைகளைத் தேடித் தொகுத்துப் பேணிப்போற்றும் கைங்கரியத்துடனேயே நம்மவரின் பொற்காலம் உதயமானது. சைவத் திருமுறையைப் பண்முறைதவறாது ஓதும்

ஓதுவார் பலர் பெருஞ் சிறப்புப் பெற்றிருந்த வளமார்ந்தகாலப்பகுதி ஒன்றும் இருந்தது. அக்காலப்பகுதியிலே தஞ்சைப் பெரிய கோயிலில் நாற்பத்தெட்டு ஓதுவார் இருந்தமை கல்வெட்டிற் பொறிக்கப்பட்டிருக்கிறது. தாராசுரம் கோயிலில் இருந்த நூற்றெட்டு ஓதுவார்களின் பெயர்களுடன் அவர்களது திருமேனிகளும் செதுக்கப்பெற்றிருந்தன. அவர்களது திருநாமங்களை நோக்குமிடத்துச் சிலர் திருஞானசம்பந்தப்பிள்ளையாரது திருக்கடைக்காப்புகளை ஓதுவதிலும், சிலர் திருநாவுக்கரசு சுவாமிகளது தேவாரங்களை ஓதுவதிலும் இன்னும் சிலர் நம்பியின் திருப்பாட்டுக்களை ஓதுவதிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தனரெனத் தெரிகிறது. வேதமோதுதலில் வல்லாரிற் சிலர் இருக்கு வேதத்திலும் இன்னும் சிலர் யசுர்வேத்ததிலும் பெயர் பெற்றிலங்குவது போன்றதே இதுவும். இவ்வாறாகத் திருமுறைப் பயிற்சி உச்சநிலை பெற்றிருந்தகாலத்தே தான் எமது பொற்காலமும் உச்சநிலை பெற்றிருந்தது. எமது பண்பாட்டுப்பெருமையைப் பறை சாற்றும் கருங்கற் கோயில்களும், கலைவண்ணம் மிக்க தெய்வத் திருமேனிகளும் உருவாயின. சைவத் திருமுறைத் தெளிவான சைவசித்தாந்தம் தத்துவஞானத்தின் கொடுமுடியெனத் தோன்றியது. உலகப்பெரும்புலவர் வரிசையிலே முன்னணியில் நிற்கத்தக்க செந்தமிழ்ப்புலவோர் தோன்றினர். திருமுறை வாசகங்களில் ஈடுபட்டு மனவாசகங்கடந்தார் எனவும் நிரம்ப அழகியர் எனவும் நீறணிபவளக்குன்றம் எனவும் பெயர் சூட்டிக்கொண்ட அக்காலத்தே தான் நம்மனோர் தேசு நானா தேசங்களிலும் பிரகாசித்தது. நானாதேசிகர் திசையாயிரத்து நூற்றுவர் ஆதிய வணிக குழுக்கள், தென்கிழக்காசிய நாடுகளிலும், தூரகிழக்கு நாடுகளிலும் வணிககுடியேற்றங்களை நிறுவின. அந்நாடுகளின் அரசவைகளிலே நம்மனோர் புரோகிதராய் அமர்ந்தனர். ஆனால் வலிந்துகவரும் மாய வாழ்க்கையின் மயக்கத்தை என் சொல்வது! பேரரசுக் காலத்தில் பெருகும் செல்வச்செருக்கினாலே பொருளாதாரத்தையே பெரிதெனக் கொள்ளலாயினர். அருளாதாரத்தை கைநெகிழ விடலாயினர். நூற்றுக்கணக்கானோர் இருந்து திருமுறை ஓதிய கோயில்களிலே ஒரு சில குருடர்களே ஓதுவாராயிருக்கும் இழிநிலை ஏற்படலாயிற்று. திரு ஆமாத்தூர் கல்வெட்டிலே திருப்பதிகம் விண்ணப்பம் செய்தற்கு சிலரும்

அவர்களுக்குக் கண்காட்டிகளான சிலரும் நியமஞ்செய்யப்பட்ட செய்தி பொறிக்கப் பெற்றிருக்கிறது. திருமுறை ஓதுதலில் பின்னடைவு ஏற்பட்ட இக்காலம் எமது பொற்காலத்தின் வீழ்ச்சிக்காலமும் ஆயிற்று. எமது பொற்காலத்தின் உதயம், உச்சம், வீழ்ச்சி, எனும் நிலைகளுக்கும் திருமுறைப்பற்றுக்கு முள்ள இவ்வியைபு நமக்கோர் படிப்பினையை உணர்த்துகிறது. மலையிலக்காக உள்ள அப்படிப்பினையாதெனில் நம்மனோரது வாழ்க்கை ஓட்டத்துக்கு ஆதாரமாகத் திருமுறை நீரோட்ட முளது என்பதாம். இப்படிப்பினையானது.

> "நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்
> திருமுறைப்படூஉம்"

எனும் கோட்பாட்டினைக் கொள்ளும் படியாயமைந்திருக்கிறது. இக்கோட்பாட்டினின்றும் நம்மனோர் மறுமலர்ச்சி காணபதற்கான உயிர்ப்பு சைவத் திருமுறையே என்பது உறுதி. ஆகவே சைவ நன்னெறியைக் கைக்கொள்ளும் செந்தமிழ் மக்களாகிய எமது கைந்நூல் சைவத்திருமுறையான தமிழ் வேதமேயாம். இத்தமிழ் வேதமந்திரமே நம்மனோர் மண்ணில் நல்லவண்ணம் வாழ்தற்கும் நற்கதியுறுதற்மான மருந்து, மந்திரம், தந்திரம் ஆதியயாவுமாம்.

> மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
> எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
> கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்
> பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

திருச்சிற்றம்பலம்

உ

## திருவாவடுதுறை ஆதீன ஏட்டுப்பிரதியின்படி தேவாரப்பண்களுக்கு வகுத்துள்ள இராகங்கள்

இக்காலத்து ஓதுவார்கள் சிலர் பழைய இராகங்களை நீக்கிப், புதிய இராகங்கள் சிலவற்றைப் புகுத்தியிருக்கிறார்கள். அவர்கள் முறையைக் கீழே தருகிறோம்.

| | பகற்பண்கள் | திருவாவடுதுறை முறையிலமைந்த இராகங்கள் | இக்காலத்து ஓதுவார் கள் சிலர் கூறும் இராகங்கள் |
|---|---|---|---|
| 1. | புறநீர்மை | ஸ்ரீகண்டி | பூபாளம் |
| 2. | காந்தாரம், பியந்தை | இச்சிச்சி | நவரோஜ் |
| 3. | கௌசிகம் | பயிரவி | பயிரவி |
| 4. | இந்தளம் திருக்குறுந்தொகை | நெளிதபஞ்சமி | நாதநாமக்கிரியை |
| 5. | தக்கேசி | காம்போதி | காம்போதி |
| 6. | நட்டராகம், சாதாரி | பந்துவராளி | பந்துவராளி |
| 7. | நட்டபாடை | நாட்டைக்குறிஞ்சி | நாட்டை |
| 8. | பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் | சங்கராபரணம் |
| 9. | காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை | கேதாரகௌளை |
| 10. | பஞ்சமம் | ஆகிரி | ஆகிரி |
| | **இராப்பண்கள்** | | |
| 1. | தக்கராகம் | கன்னடகாம்போதி | காம்போதி |
| 2. | பழந்தக்கராகம் | சுத்தசாவேரி | சுத்தசாவேரி |
| 3. | சீகாமரம் | நாதநாமக்கிரியை | நாதநாமக்கிரியை |
| 4. | கொல்லி, திருநேரிசை, கொல்லிக்கௌவாணம், திருவிருத்தம் | சிந்துகன்னடா | நவரோஜ் |
| 5. | வியாழக் குறிஞ்சி | ஸௌராஷ்ட்ரம் | ஸௌராஷ்ட்ரம் |
| 6. | மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி | நீலாம்பரி |
| 7. | குறிஞ்சி | மலகரி | அரிகாம்போதி, எதுகுலகாம்போதியின் கலப்பு |
| 8. | அந்தாளிக் குறிஞ்சி | ஸைலதேசாட்சி | சாமா |
| | **பொதுப்பண்கள்:** | | |
| 1. | செவ்வழி | எதுகுலகாம்போதி | எதுகுலகாம்போதி |
| 2. | செந்துருத்தி | மத்தியமாவதி | மத்தியமாவதி |
| 3. | திருத்தாண்டகம் | பியாகடை | அரிகாம்போதி |

ஆதாரம் : அருட்டிரு விபுலாநந்த அடிகள் : "யாழ்நூல்"

சிவமயம்

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

# தேவாரம்

## முதலாந் திருமுறை

திருப்பிரமபுரம் * பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலி தேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 5

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளிர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

* இவ்வூர் சோழ நாட்டிலுள்ளது. சீர்காழியின் பன்னிருபெயர்களுள் ஒன்று
இறைவன் - பிரமபுரீசர் : இறைவி - திருநிலைநாயகி
திருத்தோணி இறைவன் - தோணியப்பர் : இறைவி - பெரியநாயகி
திருத்தோணிச் சிகரத்தில் - சட்டைநாதர்.

திருவலிதாயம் நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பத்தரோடுபல ரும்பொலியம்மல ரங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்தவுயர் சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை கின்றவலிதாயம்
சித்தம்வைத்தடி யாரவர்மேலடை யாமற்றிடர்நோயே. 12

திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும். வினாவுரை நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

அங்கமும்வேதமு மோதுநாவர் அந்தணர்நாளு மடிபரவ
மங்குன்மதிதவழ் மாடவீதிமருக நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே. 13

திருவண்ணாமலை நட்டபாடை

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. 14

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. 15

திருவீழிமிழலை நட்டபாடை

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே. 16

திருநின்றியூர் நட்டபாடை

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந் நின்றியூரில்
நச்சம்மிட றுடையார்நறுங்கொன்றை நயந்தாளும்
பச்சம்முடை யடிகடிருப் பாதம்பணி வாரே. 17

திருக்கோலக்கா தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 18

திருவிடைமருதூர் தக்கராகம்

ஓடே கலனுண் பதுமூ ரிடுபிச்சை
காடே யிடமா வதுகல் லானிழற்கீழ்
வாடா முலைமங் கையுந்தா னுமகிழ்ந்
தீடா வுறைகின் றவிடை மருதீதோ. 19

திருச்சிற்றம்பலம்

திருப்பாச்சிலாச்சிராமம் * தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாம்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 20

---

* முயலகன் என்னும் கொடிய நோயை நீக்கிய திருப்பதிகம்

கலைபுனை மானுரி தோலுடை ஆடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணி சென்னியர் தாரணி மார்பர்
தம்அடிகள் இவர்என்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர்செய்வதோ இவர்ஈடே. 21

வெஞ்சுட ராடுவர் துஞ்சிருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதைசெய்வதோ இவர்சீரே. 22

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர் மாலை அணிந்தழ காய
புநிதர்கொ லாமிவரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 23

மாந்தர்தம் பானறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேல்புனல்வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமொர் வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர்செய்வதோ இவர்சார்வே. 24

நீறுமெய் பூசி நிறைசடை தாழ்
நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறது சூடி ஆடர வாட்டி
ஐவிரற் கோவண ஆடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட
இடர்செய்வதோ இவர் ஈடே. 25

பொங்கிள நாகமொ ரேகவ டத்தோ
டாமைவெண் ணூல்புனை கொன்றை
கொங்கிள மாலை புனைந்தழ காய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வதோ இவர்சார்வே. 26

ஏவலத் தால்விச யற்கருள் செய்து
இராவண னைஈடழித்து
மூவா லும்முத லாய்நடு வாய
மூர்த்தியை அன்றிமொழியாள்
யாவர்க ளும்பர வும்எழிற பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதைசெய்வதோ இவர்சேர்வே. 27

மேலது நான்முகன் எய்தியதில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியதில்லை
என இவர் நின்றதும் அல்லால்
ஆலது மாமதி தோய்பொழிற் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ இவர் பண்பே. 28

நாணொடு கூடிய சாயின ரேனும்
நகுவர் அவரிருபோதும்
ஊணொடு கூடிய உட்கு நகையால்
உரைகள் அவைகொள வேண்டா
ஆணொடு பெண்வடி வாயினர் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணொடு மார்பரோ பூங்கொடி வாடப்
புனைசெய்வதோ இவர் மாற்பே. 29

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலி மாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்தமிழ் கொண்டிவை ஏத்தச்
சாரகிலா வினைதானே. 30

திருச்சிற்றம்பலம்.

இறைவன் : மாற்றறிவரதர் இறைவி : பாலசுந்தரி

திருவாலங்காடு தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. 31

திருச்சேய்ஞலூர் பழந்தக்கராகம்

பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்றாதை
வேரடைந்து பாய்ந்த தாளை வேர்த்தடித் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமைவ குத்தஎன்னே
சீரடைந்த கோயின்மல்கு சேய்ஞலூர் மேயவனே. 32

திருநள்ளாறு பழந்தக்கராகம்

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 33

திருவலிவலம் பழந்தக்கராகம்

ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாம நாவினவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலமே யவனே. 34

பெண்டிர்மக்கள் சுற்றமென்னும் பேதைப்பெருங் கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் வேதனைநோய் நலியக்
கண்டுகண்டே யுன்றனாமங் காதலிக்கின்ற துள்ளம்
வண்டுகிண்டிப் பாடுஞ்சோலை வலிவலமே யவனே. 35

திருச்சிற்றம்பலம்

திருநெடுங்களம் * பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப்பேசி னல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 36

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடப் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 37

* இடர்களைக் களைந்து இன்பங்கள் இயைக்கும் தன்மை மிக்கது இத்திருப்பதிகம்.

நின்அடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்அடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்அடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்அடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 38

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடைஆ ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 39

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடும் தலைவநின்தாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 40

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 41

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 42

குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியால் ஏத்திஇராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 43

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனும்
சூழஎங்கும் நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் அடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 44

வெஞ்சொற்றஞ்சொ லாக்கிநின்ற வேடமில்லாச் சமணும்
தஞ்சமிலாச் சாக்கியரும் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 45

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பநதன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. 46

திருச்சிற்றம்பலம்.

இறைவன் : நித்திய சுந்தரர் இறைவி : ஒப்பிலா நாயகி

திருவோத்தூர் பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 47

திருவேற்காடு பழந்தக்கராகம்

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே. 48

திருத்தோணிபுரம் பழந்தக்கராகம்

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே. 49

திருக்கோளிலி பழந்தக்கராகம்

நாளாயபோகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. 50

திருப்பழனம் தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. 51

திருக்கயிலாயம் தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஒன்றும்பலவு மாயவேடத் தொருவர்கழல்சேர்வார்
நன்று நினைந்து நாடற்குரியார் கூடித்திரண்டெங்கும்
தென்றியிருளில் திகைத்தகரிதண் சாரல்நெறியோடிக்
கன்றும்பிடியும் அடிவாரஞ்சேர் கயிலை மலையாரே. 52

தாதார்கொன்றை தயங்குமுடியர் முடங்குமடவாளைப்
போதார்பாக மாகவைத்த புனிதர்பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனாய் அறநான்கருள்செய்த
காதார்குழையர் வேதத்திரளர் கயிலைமலையாரே. 53

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலை தக்கேசி

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையே டும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. 54

மஞ்சைப்போழ்ந்த மதியஞ்சூடும் வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத் தடக்குமதுவு நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும் வேடர்மடவா ரிதணமதுவேறி
அஞ்சொற்கிளிக ளாயோவென்னு மண்ணாமலையாரே. 55

திருவண்ணாமலை — தக்கேசி

எனைத்தோரூழி யடியாரேத்த விமையோர் பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலருறைகோயில்
கனைத்தமேதி காணாதாயன் கைம்மேற்குழலூத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சார லண்ணாமலையாரே. 56

திருச்சிற்றம்பலம்

கோயில் — குறிஞ்சி

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே 57

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மைய றீர்வாரே. 58

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேத்த
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே. 59

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 60

கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலா யோங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 61

திருநல்லம் குறிஞ்சி

அந்தி மதியோடு மரவச் சடைதாழ
முந்தி யனலேந்தி முதுகாட் டெரியாடி
சிந்தித் தெழவல்லார் தீரா வினைதீர்க்கும்
நந்தி நமையாள்வா னல்ல நகரானே. 62

திருநல்லூர் குறிஞ்சி

கொட்டும் பறைசீராற் குழும வனலேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே. 63

சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதாழ
ஓடுண் கலனாக வூரு ரிடுபிச்சை
நாடுந் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் மடியார்கட் கடையா பாவமே. 64

திருச்சிராப்பள்ளி குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளெ(று)
ஒன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே. 65

திருச்சிற்றம்பலம்

பொது * திருநீலகண்டம் வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினை யாமென்று சொல்லும் அஃ.தறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்தெம்பிரான்கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 66

காவினை இட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 67

முலைத்தடம் மூழ்கிய போகங் களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெம்மைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 68

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதும் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீரும் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 69

மற்றிணை இல்லா மலைதிரண் டன்னதிண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளா தொழிவதும் தன்மை கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துன் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 70

மறக்கு மனத்தினை மாற்றிஎம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 71

---

* எல்லோருடைய துன்பத்தையும் நீக்குபவன் பெருநஞ்சு அகற்றிய சிவபெருமானாகிய திருநீலகண்டன். அவனருளால் எல்லாநோயும் எளிதில் நீங்கப் பாடப்பெற்றமையால் இது திருநீலகண்டப்பதிகம் எனப்பெயர் பெற்றது.

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை ஏத்துதும் நாம் அடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 72

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினும் தோற்றுந் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 73

சாக்கியப் பட்டும் சமணுரு வாகி உடையொழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்.
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.
74

பிறந்த பிறவியிற் பேணிஎம் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே.
75

திருச்சிற்றம்பலம்

திருவலிவலம் வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 76

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். 77

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன் 78

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே 79

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
80

சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன் 81

பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி 82

செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில் 83

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன் 84

தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான் 85

காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே 86

கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே 87

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை 88

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை

ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்

கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோடு
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல் சூழ்வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை

வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறு மமணரு மறுவகைத் தேரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும்

மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்

அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லை நீணிலத்தே 89

திருச்சிற்றம்பலம்

திருவையாறு மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே. 90

திருப்பராய்த்துறை மேகராகக்குறிஞ்சி

நீறு சேர்வதொர் மேனியர்நேரிழை
கூறு சேர்வதொர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறு சேர்சடை யண்ணலே. 91

திருத்தருமபுரம் யாழ்மூரி

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படை நின் றிசைபாடவு மாடுவ
ரவர் படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே. 92

திருச்சிற்றம்பலம்

முதலாம் திருமுறை முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்

# இரண்டாந் திருமுறை

திருமருகல் இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே. 93

திருவழுந்தூர் இந்தளம்

தொழுமாறு வல்லார் துயர்தீ ரநினைந்து
எழுமா றுவல்லா ரிசைபா டவிம்மி
அழுமா றுவல்லா ரழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா டமன் னினையே. 94

திருக்கழிப்பாலை இந்தளம்

நடநண் ணியொர்நா கமசைத் தவனே
விடநண் ணியதூ மிடறா விகிர்தா
கடனண் ணுகழிப் பதிகா வலனே
உடனண் ணிவணங் குவனுன் னடியே. 95

திருநள்ளாறு இந்தளம்

ஏடுமலி கொன்றையர விந்துவிள வன்னி
மாடவல செஞ்சடையெ மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே. 96

திருப்பிரமபுரம் சீகாமரம்

தன்னடைந்தார்க் கின்பங்க டருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே.97

திருச்சிற்றம்பலம்

திருப்புள்ளிருக்குவேளூர் சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. 98

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 99

திருமயிலாப்பூர் சீகாமரம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 100

திருவெண்காடு சீகாமரம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே. 101

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. 102

**திருவெண்காடு** **காந்தாரம்**

உண்டாய் நஞ்சை யுமையோர் பங்கா வென்றுள்கித்
தொண்டாய்த் திரியு மடியார் தங்க டுயரங்கள்
அண்டாவண்ண மறுப்பா னெந்தை யூர்போலும்
வெண்டா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே. 103

திருச்சிற்றம்பலம்

## திருநீற்றுப் பதிகம்

திருவாலவாய் * திருநீற்றுப் பதிகம் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 104

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 105

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 106

---

* பாண்டியனுடைய வெப்பு நோய் நீங்கப்பாடியது.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 107

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. 108

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 109

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே. 110

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே. 111

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம் பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே 112

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் திருநீறே 113

ஆற்ற லடல்விடை யேறு மாலவாயான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 114

திருச்சிற்றம்பலம்.

# நற்சிந்தனை

## உத்தம இரகசியம்

நாங்களெல்லாம் ஓரே சமயத்தையும் ஓரே சாதியையும் சார்ந்தவர்கள்; எங்களுக்குள் ஒரு மாறுதலும் இல்லை. நாங்கள் பரிசுத்தரும், தெய்வத்துள் வைக்கப்பட்டவராகவும் இருக்கின்றோம் வித்தியாசம் வித்தியாசமான மாறுதல்கள் யாவும் உண்மைச் சுபாவத்தின் சிறப்புக்களாக இருக்கின்றன. இவைகளை மாயை எனப் பெரியோர் சொல்வர். ஒழுக்கத்தினால் வசீகரப்படுத்தப்பட்டோர்க்கன்றி மற்றையோர்க்கு இவ்வுண்மை புலப்படாது. அதுபற்றியே தன்னுயிர்போல் மன்னுயிர் யாவையும் நேசித்தல் வேண்டுமென்று மகத்துக்களால் திரும்பத் திரும்பத் வற்புறுத்தப்பட்டு வருகின்றது. ஆகையால் யாவும் ஒழுக்கத்திலேயே தங்கியிருக்கின்றன. இவ்வொழுக்கவழியில் நின்று எல்லாம் நாம் என்று பாவனை செய்து வரவர அற்புதமான அநுபவங்கள் மூலமாக நாங்கள் சடப்பொருள் அல்ல, சித்துப் பொருளென்று தெளியலாகும்.

---

இது பாண்டிய நாட்டிலுள்ளது. இக்காலம் மதுரை என வழங்கப்பெறும்.
இறைவன் : சொக்கலிங்க மூர்த்தி;
இறைவி : மீனாட்சியம்மை.

திருச்சிற்றம்பலம்

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச்
சட்ட வுண்டு
சிவனதாட் சிந்தியாப் பேதைமார் போலநீ
வெள்கி னாயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந் தேறிய
காள கண்டன்
அவனதா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே 115

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே 116

---

* திருவாரூரில் புற்றிடங் கொண்டருளும் பொற்தியாகராசரை தம் வாழ்முதலாக, திருநீற்றடைவே மெய்பொருளின்ப வாழ்வு என்று அறிந்து அநுபவித்து விளங்கும் திருத்தொண்டருடன் இருந்தருளி வழிபட்டு வரும் திருப்பெருகு திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்புகலூரில் எழுந்தருளிய வாகீசப் பெருந்தகையைக் காண விரும்பினார்கள். ஆரூர்புறத்தே போந்தார்கள். போந்ததும் ஆரூரையே நோக்கி நின்றார்கள். புகலூர் அழைக்கிறது. ஆரூர் தடுக்கிறது. பிள்ளையார் உள்ளம் ஒன்றும் துணியாது நிற்கிறது. அந்நிலையில் அவமில்லாத நெஞ்சமே! நீ அஞ்சாதே உய்யும் வகையை அறிவாய்நீ, செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோதியை நேர்தொழுஞ் சீலத்தை மறவேல்! என்றருளியவாறு. ஈண்டு திருக்கடைக்காப்பில் "நல்லவே நல்லவே" என்ற அடுக்கும் ஏகாரமும் சுவாமிகள் திருவாய் மலர்ச்சியின் எய்தும் ஆன்மலாபத்தை கூறாநிற்கும். ஒழுக்கம் உடையார்க்கு, ஒல்லாவே தீயவழுக்கியும் வாயாற்சொலல் என்றதனுரையில் பரிமேலழகர் எழுதிய தாற்பரியம் கருதற்பாலது. இத்திருப்பதிகம் நித்திய பாராயணத்துக்குரியவற்றுள் ஒன்றாகும். சிவம்.

நிணங்குடர் தோனரம் பென்புசே ராக்கைதா
னிலாய தன்றால்
குணங்களார்க் கல்லது குற்றநீங்காதெனக்
குலுங்கி னாயே
வணங்குவார் வானவர் தானவர் வைகலு
மனங்கொ டேத்தும்
அணங்கனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே. 117

நீதியால் வாழ்கிலை நாள்செலா நின்றன
நித்த நோய்கள்
வாதியா வாதலா னாளுநா ளின்பமே
மருவி னாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணர்க
ளேத்து முக்கண்
ஆதியா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே 118

பிறவியால் வருவன கேடுள வாதலாற்
பெரிய வின்பத்
துறவியார்க் கல்லது துன்பநீங் காதெனக்
தூங்கி னாயே
மறவனீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்தநீர்
மல்கு சென்னி
அறவனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே 119

செடிகொள்நோ யாக்கையைம் பாம்பின் வாய்த்
தேரைவாய்ச் சிறுபறவை
கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற லாமென்று
கருதி னாயே
முடிகளால் வானவர் முன்பணிந் தன்பரா
யேத்து முக்கண்
அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே 120

ஏறுமால் யானையே சிவிகையந் தளகமீச்
சோப்பி வட்டின்
மாறிவா ழுடம்பினார் படுவதோர் நடலைக்கு
மயங்கி னாயே
மாறிலா வனமுலை மங்கையோர் பங்கினர்
மதியம் வைத்த
ஆறனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே 121

என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந்
திதுநம் மில்லம்
புன்புலா னாறுதோல் போர்த்துப்பொல் லாமையான்
முகடு கொண்டு
முன்பெலா மொன்பது வாய்தலார் குரம்பையின்
மூழ்கிடாதே
அன்பனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே 122

தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர்
தார மென்னும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப்
பற்றினாயே
வெந்தநீ றாடியா ராதியார் சோதியார்
வேத கீதர்
எந்தையா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே 123

நெடியமால் பிரமனு நீண்டுமண் ணிடந்தின்ன
நேடிக் காணாப்
படியனார் பவளம்போல் உருவனார் பனிவளர்
மலையாள் பாக
வடிவனார் மதிபொதி சடையனார் மணியணி
கண்டத் தெண்டோள்
அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச நெஞ்சே 124

பல்லிதழ் மாதவி யல்லிவண் டியாழ் செயுங்
காழி யூரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம்
பந்த னாரூர்
எல்லியம் போதெரி யாருமெம் மீசனை
யேத்து பாடல்
சொல்லவே வல்லவர் தீதிலா ரோதநீர்
வையகத்தே. 125

திருச்சிற்றம்பலம்.

## சிவோகம் பாவனை

தெய்வத்தை நம்பு, முழுமனத்தோடு நம்பு; உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. இருக்கும் போதும், நிற்கும் போதும், நடக்கும் போதும், கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும், இரத்தத்திலும் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

-நற்சிந்தனை.

## கோளறு பதிகம்

பொது * பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 126

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 127

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 128

* சிவனடியாரை நாளுங்கோளு மொன்றுஞ் செய்யா என்று பிள்ளையார் அப்பருக்குக் கூறியபோது பாடியது.

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 129

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 130

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 131

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 132

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 133

பலபல வேட மாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 134

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 135

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 136

திருச்சிற்றம்பலம்

திருநெல்வாயிலரத்துறை பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 137

திருக்கோடிகா நட்டராகம்

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. 138

திருவலஞ்சுழி நட்டராகம்

என்னபுண்ணியஞ் செய்தனைநெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே. 139

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதீச்சரம் * நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

விருது குன்றமா மேருவி னாணரை
வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. 140

* இது ஈழநாட்டிலுள்ளது. இராமேசுவரத்திலிருந்து திருக்கேதீச்சரத்தை நோக்கிபாடியது.

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாத கேதீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. 141

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதோர் இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்து
அணணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே. 142

பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே. 143

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்து
எல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே. 144

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. 145

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே. 146

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்து
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. 147

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்குமா
தோட்டநன் நகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே. 148

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே. 149

மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் மாதோட்டத்து
ஆட லேறுடை யண்ணல்கே தீச்சரத்து
அடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே. 150

திருச்சிற்றம்பலம்

இறைவன் :கேதீச்சுவரர் இறைவி : கௌரியம்மை

திருக்கேதாரம் செவ்வழி

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யு மிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 151

திருநாகைக்காரோணம் செவ்வழி

கூனற்றிங்கட் குறுங்கண்ணி கான்றந்நெடு வெண்ணிலா
ஏனற்பூத்தம் மராங்கோதை யோடும் விராவுஞ்சடை
வானநாடன் னமரர்பெரு மாற்கிடமா வது
கானல்வேலி கழிசூழ் கடனாகைக் காரோணமே. 152

திருச்சிக்கல் இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நீலநெய்தனில் விம்மல ருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழ னிவ்வள மல்கிய சிக்கலுள்
வேலொண் கண்ணியி னாளையொர் பாகன்வெண் ணெய்ப்பிரான்
பாலவண் ணன்கழ லேத்தநம் பாவம் பறையுமே. 153

திருநெல்வாயில் இந்தளம்

புடையினார் புள்ளி கால்பொருந்திய
மடையினார்மணி நீர்நெல்வாயிலார்
நடையினால்விறற் கோவணந்நயந்
துடையினாரெம துச்சியாரே. 154

இரண்டாம் திருமுறை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம

## மூன்றாந் திருமுறை

கோயில் காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம தொல்வினையே. 15[?]

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

பந்துசேர் விரலாள் பவளத்துவர்
வாயினாள்பனி மாமதிபோன்முகத்
தந்தமில்புக ழாண்மலைமாதொடு மாதிப்பிரான்
வந்து சேர்விடம் வானவரெத்திசையுந்
நிறைந்துவலஞ் செய்துமாமலர்
புந்தி செய்திறைஞ்சிப் பொழிபூந்தராய் போற்றுதுமே. 156

காவியங்கருங் கண்ணினாள் கனித்
தொண்டைவாய்க்கதிர் முத்தநல்வெண்ணகைத்
தூவியம்பெடை யன்னநடைச்சுரி மென்குழலாள்
தேவியுந்திரு மேனியோர்பாகமா
யொன்றிரண்டொரு மூன்றொடு சேர்பதி
பூவிலந்தண னொப்பவர்பூந்தராய் போற்றுதுமே. 157

பையராவரு மல்குன்மெல்லியல்
பஞ்சின்னேரடி வஞ்சிகொணுண்ணிடைத்
தையலாளொரு பாலுடையெம்மிறை சாருமிடஞ்
செய்யெலாங்கழு நீர்கமலம்மலர்த்
தேறலூறலிற் சேறுலராதநற்
பொய்யிலாமறையோர்பயில்பூந்தராய் போற்றுதுமே. 158

முள்ளி நாண்முகை மொட்டியல் கோங்கி
னரும்புதேன்கொள் குரும்பைமூவாமருந்
துள்ளியன்றபைம்பொற் கலசத்தியே லொத்தமுலை
வெள்ளிமால்வரை யன்னதோர்மேனியின்
மேவினார்பதி வீமருதண்பொழிற்
புள்ளினந்துயின் மல்கியபூந்தராய் போற்றுதுமே. 159

---

* திருப்பூந்தராய் - சீகாழியின் பன்னிருபெயர்களுள் ஒன்று

பண்ணியன்றெழு மென்மொழியாள்பகர்
கோதையேர்திகழ் பைந்தளிர்மேனியோர்
பெண்ணியன்ற மொய்ம்பிற் பெருமாற்கிடம் பெய்வளையார்
கண்ணியன்றெழு காவிச்செழுங்கரு
நீலமல்கிய காமருவாவிநற்
புண்ணியருறையும் பதிபூந்தராய் போற்றுதுமே. 160

வாணிலாமதி போனுதலாண்மட
மாழையொண்கணாள் வண்டரளந்நகை
பாணிலாவிய வின்னிசையார்மொழிப் பாவையொடுஞ்
சேணிலாத்திகழ் செஞ்சடையெம்மண்ணல்
சேர்வதுசிகரப் பெருங்கோயில்சூழ்
போணிலா நுழையும் பொழிற்பூந்தராய் போற்றுதுமே. 161

காருலாவிய வார்குழலாள்கயற்
கண்ணினாள்புயற் காலொளிமின்னிடை
வாருலாவிய மென்முலையாண்மலை மாதுடனாய்
நீருலாவிய சென்னியன் மன்னி
நிகருநாம முந்நான்குநிகழ்பதி
போருலாவெயில் சூழ்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. 162

காசைசேர்குழலாள் கயலேர்தடங்
கண்ணிகாம்பன தோட்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலை மாதமருந்திரு மார்பகலத்
தீசன்மேவு மிருங்கயிலையெடுத்தானை
யன்றடர்த்தா னிணைச்சேவடி
பூசைசெய்பவர் சேர்பொழிற் பூந்தராய் போற்றுதுமே. 163

கொங்குசேர்குழ லாணிழல் வெண்ணகைக்
கொவ்வைவாய்க்கொடி யேரிடையாளுமை
பங்குசேர்திரு மார்புடையார்படர் தீயுருவாய்
மங்குல்வண்ணனு மாமலரோனு
மயங்க நீண்டவர் வான்மிசைவந்தெழு
பொங்குநீரின் மிதந்தநற்பூந்தராய் போற்றுதுமே. 164

கலவமாமயி லாரியலாள்கரும்
பன்னமென்மொழி யாள்கதிர்வாணுதற்
குலவுபூங்குழ லாளுமைகூறனை வேறுரையால்
அலவைசொல்லுவார் தேரமணாதர்க
ளாக்கினான்றனை நண்ணலுநல்குநற்
புலவர்தாம் புகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமே. 165

தேம்பனுண்ணிடை யாள்செழுஞ்சேலன
கண்ணியோடண்ணல் சேர்விடந்தேனமர்
பூம்பொழிறிகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமென்
றோம்புதன்மையன் முத்தமிழ் நான்மறை
ஞானசம்பந்த னொண்டமிழ்மாலைகொண்
டாம்படியிவை யேத்தவல்லார்க்கடையா வினையே. 166

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை * காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 167

வாழினுஞ் சாவினும் வருந்திலும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 168

---

* தந்தையார் யாகஞ்செய்யப் பனங்கேட்டபோது இறைவனை வேண்டி உலவாக்கிழி பெற்றுக்கொடுத்தபோது பாடப்பெற்றது.

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 16

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 170

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 171

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 172

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 173

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரைஅடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 174

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நா
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 175

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றாதென்நா
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே. 176

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படையெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே. 177

திருச்சிற்றம்பலம்.

---

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
இறைவன் : மாசிலாமணியீசர் : செம்பொற்றியாகர் :
இறைவி : ஒப்பிலா முலையம்மை.

## திருவைந்தெழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே 178

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே 179

ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே 180

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே 181

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே 182

---

* ஆளுடைய பிள்ளையார் உபநயனஞ் செய்யப் பெற்றபோது மறையவர்க்கும் உலகவர்க்கும் இத்திருப்பதிகத்தை ஓதியருளினார். இத்திருப்பதிகமே போதி மங்கையில் திருமுறையெழுதும் அன்பரால் புத்தநந்தியின் தலையில் இடிவிழுமாறு ஓதியருளப்பெற்றது.

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே 183

வீடுபி றப்பை அறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடிஉ கப்பன அஞ்செ ழுத்துமே 184

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. 185

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே 186

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே 187

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே. 188

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் கொல்லி

திருச்சிற்றம்பலம்

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. 189

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே. 190

திருந்துதேவன் குடி கொல்லி

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே. 191

திருக்கானப்பேர் கொல்லி

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணலின்
அடியலால் அடைசரண் உடையரோ வடியரே. 192

திருச்சக்கரப்பள்ளி கொல்லி

பாடினார் அருமறை பனிமதி சடைமிசைச்
சூடினார் படுதலை துன்எருக் கதனொடும்
நாடினார் இடுபலி நண்ணியோர் காலனைச்
சாடினார் வளநகர் சக்கரப் பள்ளியே. 193

திருக்காளத்தி கொல்லி

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே. 194

திருவாலவாய் கொல்லி

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெரும் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே. 195

திருவாரூர் கௌசிகம்

கருத்த னேகரு தார்புர மூன்றெய்த
ஒருத்தனே யுமை யாளொரு கூறனே
திருத்த னேதிரு வாரூரெந் தீவண்ண
அருத்த வென்னெனை யருச லென்னாததே. 196

திருவாலவாய் கௌசிகம்

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யாவமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. 197

ஓதி யோத்தறி யாவம ணாதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு வாலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே. 198

திருச்சிற்றம்பலம்.

பொது | நமச்சிவாயத் திருப்பதிகம் * | பண்: கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே 199

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெல்லாம்
நம்ப னாமம் நமச்சி வாயவே 200

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாமம் நமச்சி வாயவே 201

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சி வாயவே 202

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே 203

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி, நாமம் நமச்சி வாயவே 204

---

* திருநல்லூர்ப் பெருமணத்தில் திருமணச்சடங்குகள் நிறைவேறும் வேளையில் பிள்ளையார் திருக்கோயிலுள் சென்று "கல்லூர்ப் பெருமணம் " என்னும் திருப்பதிகம் பாட தோன்றிய சோதியில் வகுக்கப்பட்ட வாயிலின் வழியே பூவையாரோடும் மற்றுள்ளவரோடும் புகும்போது பாடிய இத் திருப்பதிகம்.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாமம் நமச்சி வாயவே 205

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாமம் நமச்சி வாயவே 206

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே 207

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே 208

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 209

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. 210

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றரு ளாலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்றென்னன் பாண்டியற் காகவே. 211

திருவாலவாய் திருவிராகம் : கௌசிகம்

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே. 212

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென்மு கம்மனே. 213

கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டுமின்று முன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே. 214

திருச்சிற்றம்பலம்.

பொது திருப்பாசுரம் * கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 215

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய ரேறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே. 216

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ. 217

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார். 218

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்துசார் மின்களே. 219

ஆடும் மெனவும் மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடும் மெனவும் புகழல்லது பாவநீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும் மெனக்கேட் டீராகில்
நாடுந் திறத் தார்க் கருளல்லது நாட்ட லாமே. 220

* பிள்ளையார் மதுரையில் அமணர்களோடு செய்த புனல் வாதத்தின் போது இத்திருப்பாசுரத்தைப் பாடியெழுதிய திருவேட்டைத் தம் கையாலே வைகையாற்றிலே விட அது எதிரேறி இது பொருளென யாவரும் அறியக்காட்டி திருவேடகம் என்னும் தலத்தைச் சென்றடைந்தது.

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் மறிவார் சொலக் கேட்டு மன்றே. 221

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூத னொலி மாலை யென்றே கலிக்கோவை சொல்லே. 222

பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே. 223

மாலாய வனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே.
224

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே. 225

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
எல்லார்களும் பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே. 226

திருச்சிற்றம்பலம்.

திருக்காளத்தி சாதாரி

திருச்சிற்றம்பலம்

வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடினட மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
காய்கணை யினாலிடைந் தீசனடி கூடுகா ளத்திமலையே. 227

திருச்சிற்றம்பலம்

திருநெல்வேலி சாதாரி

திருச்சிற்றம்பலம்

மருந்தவை மந்திர மறுமைநன்
நெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே. 228

திருச்சிறுகுடி சாதாரி

திருச்சிற்றம்பலம்

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி யரவுடை யீரே
படமலி யரவுடை யீருமைப் பணிபவர்
அடைவது மமருல கதுவே. 229

தெள்ளிய புனலணி சிறுகுடி மேவிய
துள்ளிய மானுடை யீரே
துள்ளிய மானுடை யீரும தொழுகழல்
உள்ளுதல் செயநல முறுமே. 230

திருச்சிற்றம்பலம்

திருவாலவாய் பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லியமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞான நின்புக ழேவேண்டுந் தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 231

திருவாலவாய் புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே. 232

வெற்றவே யடியா ரடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய
குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடைய னும்பரார் தலைவன்
உலகினி லியற்கையை யொழித்திட்டு
அற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற
ஆலவா யாவது மிதுவே. 233

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே. 234

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 235

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே 236

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்

* இத்திருப்பதிகம் இராமேசுவரத்திலிருந்து இத்திருத்தலத்தை நோக்கிப் பாடியது.

தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 237

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 238

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 239

* * * * *

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 240

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 241

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய ளொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 242

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 243

திருச்சிற்றம்பலம்.

---

இது ஈழ நாட்டிலுள்ளது.

இறைவன் : கோணேசுவரர் இறைவி : மாதுமையாள

திருநல்லூர் பெருமணம் * அந்தாளிக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே. 244

தருமண லோதஞ்சேர் தண்கட னித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங் கொண்டானே. 245

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்று
இன்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 246

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே. 247

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
நீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. 248

---

* பிள்ளையார் திருநல்லூர்ப் பெருமணத்திலே திருமணப்பந்தரில், சடங்கினை முற்றி எரிவலம் வரும் வேளையில் திருக்கோயிலையடைந்து இத்திருப்பதிகம் பாடியருளினார். அப்போது இறைவன் வகுத்துக் காட்டிய சுயஞ்சோதியில், நமச்சிவாயத் திருப்பதிகத்தை யருளிச் செய்து, எல்லோரையும் புகுவித்துத் தாமும் தம் கன்னியோடு புகுந்தருளினார்.

சிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறா நல்லூர்ப் பெருமணத்து
இட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே. 249

மேகத்த கண்டன்எண் தோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலி தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான்நல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. 250

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. 251

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே. 252

ஆத ரமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாள்தொழ வீடெளி தாமே. 253

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே. 254

திருச்சிற்றம்பலம்

மூன்றாந் திருமுறை முற்றுப்பெற்றது.

---

* இது சோழநாட்டிலுள்ளது. இன்று ஆச்சாள்புரம் என்று வழங்குகிறது.
இறைவன் : சிவலோகத்தியாகேசர் இறைவி : திருவெண்ணீற்றுமையம்மை.

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராண சாரம்

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோன் அமுதுமையாள் கருதி யூட்டும்
ஏழிசையின் அமுதுண்டு, தாளம் வாங்கி
இலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி
வாமுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருகற் றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின் வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர்போ யணைய வேற்றி
ஓரமண ரொழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓட மேற்றிக்
காருதவும் இடிபுத்தன் தலையி லேற்றிக்
காயாத பனையின் முதுக் கனிகளேற்றி
ஈரமிலா அங்கமுயி ரெய்த லேற்றி
இலங்குபெரு மணத்தரனை எய்தி னாரே.

- உமாபதி சிவாசாரியார்

சீகாழித் தேவருக்கு மங்களம்

- நற்சிந்தனை.

உ

சிவமயம்

## திருநாவுக்கரசு நாயனார்

அருளிச் செய்த

# தேவாரம்

## நான்காந் திருமுறை

திருவதிகை வீரட்டானம் * கொல்லி

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
    கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
    பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
    குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக் கெடில
    வீரட்டா னத்துறை அம்மானே. 255

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
    நினையாதொரு போது மிருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
    வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
    நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக் கெடில
    வீரட்டா னத்துறை அம்மானே. 256

---

* சமணசமயத்திற் சேர்ந்திருந்த மருணீக்கியாரைப் பீடித்திருந்த சூலை நோய் மருந்தினாலும் மந்திரத்தினாலும் தீராது, இத் திருப்பதிகம் பாடத் தீர்ந்தது. இதனைப் பத்தி சிரத்தையுடன் ஓதுபவர்கள் தமக்கு ஏற்படும் வயிற்றுவலி நீக்கிக் குணமடைகிறார்கள்.

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை கொண்டு
அணிந்தீரடி கேள்அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 257

முன்னம்அடி யேன்அறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 258

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 259

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 260

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தேஉமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப்புரட் டிஅறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன் அடி யேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 261

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடி யேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர் துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென். வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 262

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை யினித்தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்
அன்பேஅமை யும்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 263

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்கா டரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தான் அரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 264

திருச்சிற்றம்பலம்.

---

இது நடுநாட்டிலுள்ளது. அட்டவீரட்டங்களுள் ஒன்று.

இறைவர் : அதிகைவீரட்டநாதர் இறைவி : திருவதிகைநாயகி

திரு வதிகை வீரட்டானம் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை. 265

திருவையாறு காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன். 266

திருவாரூர் காந்தாரம்

நீறுமெய் பூசவல் லானு நினைப்பவர் நெஞ்சத்து ளானும்
ஏறுகந் தேறவல் லானு மெரிபுரை மேனியி னானும்
நாறு கரந்தையி னானு நான்மறைக் கண்டத்தி னானும்
ஆறு சடைக்கரந் தானு மாரூ ரமர்ந்தவம் மானே. 267

திருவாரூர் காந்தாரம் \ குறிஞ்சி

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
உழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே. 268

திருக்கச்சியேகம்பம் காந்தாரம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 269

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே. 270

அண்டமா யாதியா யருமறையொ டைம்பூதப்
பிண்டமா யுலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை யென்மனத்தே வைத்தேனே.
271

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.
272

திருச்சிற்றம்பலம்

பொது * திருவங்கமாலை சாதாரி

திருச்சிற்றம்பலம்.

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய் 273

---

* செல்கதி காட்டிடப் போற்றும் திரு அங்கமாலை" என்று சிறப்பிக்கப் பெற்றுள்ள இத்திருப்பதிகத்தைப் படனஞ் செய்பவர் பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவார்கள்.

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 274

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ. 275

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய் 276

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 277

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய் 278

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர் 279

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென். 280

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பயனென். 281

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்கு
உற்றா ராருளரோ. 282

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ. 283

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 284

திருச்சிற்றம்பலம்.

பொது * நமச்சிவாயத் திருப்பதிகம் காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 285

---

* அமணர் சொற்கேட்ட பல்லவ அரசன் மருணீக்கியாரைக் கல்லுடன்கட்டி கடலில் பாய்ச்சப் பணித்தான். அப்போது அவர் திருவைந் தெழுத்தைத் துதிப்பவராய் இத்திருப்பதிகத்தைப் பாட அக்கல்லே தெப்பமாகத் திருப்பாதிரிப் புலியூரில் கரையேறினார்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 286

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 287

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 288

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. 289

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில நாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 290

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே 291

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது.
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயயே. 292

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேச ரணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 293

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 294

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனம் பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புது நலமுண் டிகழ்வானோ. 295

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதிக்
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே. 296

திருச்சிற்றம்பலம்

பொது * விடந்தீர்த்த திருப்பதிகம் இந்தளம்

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே. 297

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே 298

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வின்நாண்
மூன்றுகொ லாம்புரம் மெய்தன தாமே 299

நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் றோற்றமும்
நாலுகொ லாமவ ரூர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடின தாமே 300

அஞ்சுகொ லாமவ ராடர வின்படம்
அஞ்சுகொ லாமர் வெல்புல னாவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவ ராடின தாமே 301

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே 302

---

* திங்களூரிலே அப்பூதியடிகள் அப்பரடிகளுக்குத் திருவமுது செய்விக்க விரும்பி மைந்தன் மூத்த திருநாவுக்கரசரை வாழைக் குருத்து அரிந்து வர அனுப்பினார். அப்போது அவர் பாம்பு தீண்டியிறந்தார். அதனை அறிந்த அப்பமூர்த்தி சவத்தை சிவாலயத்துக்கு கொணர்வித்து இத்திருப்பதிகத்தைப் பாடியருள அவர் உயிர்பெற்று எழுந்தார்.

ஏழுகொ லாமவ ரூழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்ட விருங்கடல்
ஏழுகொ லாமவ ராளு முலகங்கள்
ஏழுகொ லாம்மிசை யாக்கின தாமே 303

எட்டுக்கொ லாமவ ரீறில் பெருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடு மினமலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை யாவன
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே. 304

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினி னூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே 305

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின் பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே 306

திருச்சிற்றம்பலம்

திருவாரூர் * திருவாதிரைத் திருப்பதிகம் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனாரு ராதிரைநாளா லதுவண்ணம் 307

நணியார்சேயார் நல்லார்தீயார் நாடோறும்
பிணிதான்றீரு மென்றுபிறங்கிக் கிடப்பாரும்
மணியேபொன்னே மைந்தாமணாளா வென்பார்கட்கு
அணியானாரு ராதிரைநாளா லதுவண்ணம். 308

* திருவாரூரில் திருவாதிரைத் திருநாள் திருவிழாவைச் சேவித்து மகிழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரை, திருப்புகலூரிலே முருகநாயனார் திருமடத்திலே சந்தித்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் "அப்பரே நீர் வரும் நாளில் திருவாரூரிலே நடந்த சிறப்பைச் சொல்லும்" என அப்பர் இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

வீதிகடோறும் வெண்கொடி யோடு விதானங்கள்
சோதிகள்விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்
சாதிகளாய பவளமுமுத்துத் தாமங்கள்
ஆதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 309

குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப்போலப் பிதற்றுவார்
வணங்கிநின்று வானவர் வந்து வைகலும்
அணங்கனாரூ ராதிரை நாளா லதுவண்ணம். 310

நிலவெண்சங்கும் பறையும்மார்ப்ப நிற்கில்லாப்
பலருமிட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்
கலவமஞ்ஞை காரென்றெண்ணிக் களித்து வந்து
அலமராரூ ராதிரைநாளா லதுவண்ணம். 311

விம்மாவெருவா விழியாத்தெழியா வெருட்டுவார்
தம்மாண்பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்
எம்மானீச னெந்தையெ னப்ப னென்பார்கட்கு
அம்மானாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 312

செந்துவர்வாயார் செல்வன்சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவார்
இந்திரனாதி வானவர்சித்த ரெடுத்தேத்தும்
அந்திரனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 313

முடிகள்வணங்கி மூவாதார்கண் முன்செல்ல
அடிகொள்வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்லப்
பொடிகள்பூசிப் பாடும்தொண்டர் புடை சூழ
அடிகளாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 314

துன்பநும்மைத் தொழாதநாள்க ளென்பாரும்
இன்பநும்மை யேத்துநாள்க ளென்பாரும்
நும்பிநெம்மை நுழையப்பணியே யென்பாரும்
அன்பனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 315

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்தநாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளும் குறிக்கோளி லாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துளானே. 326

திருவாலங்காடு திருநேரிசை

வெள்ளநீர்ச் சடையர்போலும் விரும்புவார்க் கெளியர் போலும்
உள்ளுளே யுருகிநின்றங் குகப்பவர்க் கன்பர்போலும்
கள்ளமே வினைகளெல்லாங் கரிசறுத் திடுவர்போலும்
அள்ளலம் பழனைமேய வாலங்காட் டடிகளாரே. 327

திருநனிபள்ளி திருநேரிசை

புலர்ந்தகால் பூவும்நீருங் கொண்டடி போற்றமாட்டா
வலஞ்செய்து வாயினூலால் வட்டணைப் பந்தர்செய்த
சிலந்தியை யரையனாக்கிச் சீர்மைக ளருளவல்லார்
நலந்திகழ் சோலைசூழ்ந்த நனிபள்ளி யடிகளாரே. 328

திருநனிபள்ளி திருநேரிசை

துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதிநாளு மரனடிக் கன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா வமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே. 329

திருநாகைக்காரோணம் திருநேரிசை

மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ்நாகை மன்னுகா ரோணத்தானை
நினையுமா வல்லீராகி லுய்யலா நெஞ்சினீரே. 330

பொது தனித்திருநேரிசை

கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்போக்கித்
தெள்ளியே னாகிநின்று தேடினே னாடிக்கண்டேன்
உள்குவா ருள்கிற்றெல்லா முடனிருந் தறிதியென்று
வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே. 331

பொது திருநேரிசை

அங்கத்தை மண்ணுக்காக்கி யார்வத்தை யுனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமாநின்னைச்
சங்கொத்த மேனிச்செல்வா சாதனா ணாயேனுன்னை
எங்குற்றா யென்றபோதா விங்குற்றே னென்கண்டாயே. 332

பொது தனித்திருநேரிசை

மெய்ம்மையா முழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையைவாங்கிப் பொறையெனு நீரைப்பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையு ணிற்பராகிற் சிவகதி விளையுமன்றே. 333

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே. 334

வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டிற் பூட்டி
அஞ்சலென் றாண்டு கொண்டாய் அதுவுநின் பெருமையன்றே
நெஞ்சகங் கனியமாட்டேன் நின்னையுள் வைக்கமாட்டேன்
நஞ்சிடங் கொண்ட கண்டா என்னென நன்மைதானே 335

விள்ளத்தா னொன்று மாட்டேன் விருப்பெனும் வேட்கையாலே
வள்ளத்தேன் போலதுன்னை வாய்மடுத் துண்டிடாமே

உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றியம்மா எங்ஙனங் காணுமாறே. 336

ஆசைவன் பாசமெய்தி யங்குற்றே னிங்குற்றேனாய்
ஊசலாட் டுண்டுவாளா வுழந்துநா னுழிதராமே
தேசனே தேசமூர்த்தி திருமறைக் காடுமேய
ஈசனே யுன்றன்பாத மேத்துமா றருளெம்மானே. 337

விளக்கினார் பெற்றவின்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவின் னேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில் கீதஞ்சொன்னார்க் கடிகடா மருளுமாறே. 338

திருச்சிற்றம்பலம்

கோயில் திருவிருத்தம் கொல்லி

பாளை யுடைக்கமு கோங்கிபன் மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னுள்
ஆள வுடைக்கழற் சிற்றம் பலத்தர னாடல்கண்டாற்
பீளை யுடைக்கண்க ளாற் பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்னே
339

பொருவுடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 340

வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தே னணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்த
கச்சி னழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 341

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க
நெஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்ப தென்னே.
342

ஊனத்தை நீக்கி யுலகறிய வென்னை யாட்கொண்டவன்
தேனொத் தெனக்கினி யான்றில்லைச் சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே.
343

**கோயில் திருவிருத்தம் கொல்லி**

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோவென்று வாழ்த்துவனே. 344

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் திருக்குறிப்பே. 345

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. 346

படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்செ னாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லேனெழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே. 347

திருவையாறு திருவிருத்தம்

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாற னடித்தலமே. 348

ஓதிய ஞானமும் ஞானப் பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணுமண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோடு
ஆதியு மந்தமு மானவை யாற னடித்தலமே. 349

திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே 350

வைத்த பொருணமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ வறிவிலாப் பேதைநெஞ்சே. 351

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே. 352

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே. 353

மண்பாத லம்புக்கு மால்கடன் மூடிமற் றேழுலகும்
விண்பா றிசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சல்நெஞ்சே
திண்பா னமக்கொன்று கண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே. 354

திருந்தா வமணர்தந் தீநெறிப் பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா வரக்க னுடனெரித் தாய்பா திரிப்புலியூர்
இருந்தா யடியே னினிப்பிற வாமல்வந் தேன்றுகொள்ளே. 355

திருச்சத்திமுற்றம் திருவிருத்தம்

கோவாய் முடுகியடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. 356

திருக்கச்சியேகம்பம் திருவிருத்தம்

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே. 357

திருவாரூர் திருவிருத்தம்

குலம்பலம் பாவரு குண்டர்முன் னேநமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புனலாரூ ரவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி யான்றிரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 358

திருத்தூங்கானைமாடம் திருவிருத்தம்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல

மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே. 359

பொது தனித்திருவிருத்தம்

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே. 360

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே. 361

திருச்சிற்றம்பலம்

நான்காம் திருமுறை முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்

# ஐந்தாம் திருமுறை

**கோயில்** **திருக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. 362

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 363

திருச்சிற்றம்பலம்

**கோயில்** **திருக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 364

தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய ஒருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனோ. 365

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனோ. 366

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவென்
ஆணியைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனோ. 367

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனோ. 368

நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத்து
ஆதி யையடி யேன்மறந் துய்வனோ. 369

மைகொள் கண்டனெண் தோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம்ப லத்தெங்கள்
ஐய னையடி யேன்மறந் துய்வனோ. 370

முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙன முய்வனோ. 371

காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கை மணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந் துய்வனோ. 372

ஓங்கு மால்வரை ஏந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற ஊன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனோ. 373

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காடு திருக்குறுந்தெகை

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே. 374

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. 375

திருவிடைமருதூர் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 376

திருக்கடம்பூர் திருக்குறுந்தொகை

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. 377

திருஇன்னம்பர் திருக்குறுந்தொகை

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே. 378

திருநின்றியூர் திருக்குறுந்தொகை

அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
இஞ்சி மாமதில் எய்தியிமை யோர்தொழும்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. 379

திருவேட்களம் திருக்குறுந்தொகை

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. 380

திருக்கச்சியேகம்பம் திருக்குறுந்தொகை

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே. 381

திருவாய்மூர் திருக்குறுந்தொகை

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்டு
அங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார தென்கொலோ. 382

திருமாற்பேறு திருக்குறுந்தொகை

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே. 383

இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே. 384

திருச்சிற்றம்பலம்.

திருநீலக்குடி திருக்குறுந்தொகை

வைத்த மாடும் மனைவியு மக்கள்நீர்
செத்த போது செறியார் பிரிவதே
நித்த நீலக் குடியர னைந்நினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே. 385

கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே. 386

திருச்சேறை திருக்குறுந்தொகை

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. 387

திருப்புள்ளிருக்குவேளூர் திருக்குறுந்தொகை

உள்ள முள்கி யுகந்து சிவனென்று
மெள்ள வுள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளினார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே. 388

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தைதிருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. 389

திருச்சிற்றம்பலம்.

பொது * தனிக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. 390

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 391

ஆளாகார் ஆளானாரை யடைந்துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே. 392

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. 393

* பல்லவ அரசனின் கட்டளைப்படி சமணர்களால் நீற்றறையில் விட்டுப் பூட்டப் பெற்ற மருணீக்கியார் சிவபிரானுடைய திருவடிநிழலைத் தலைக்கொண்டு இத்திருப்பதிகத்தைப் பாடினார். அந்நீற்றறை வீணா கானமும், சந்திரனும், தென்றலும், இளவேனிலும், பொய்கையும் போலக் குளிர்ந்தது.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே. 394

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. 395

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. 396

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையும் சூழ்ந்துகொண்டு
உழுத சால்வழி யேயுழு வான்பொருட்டு
இழுதை நெஞ்சமி தென்படு கின்றதே. 397

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே. 398

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 399

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே. 400

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கும் ஈசனெ னாதவர்க் கில்லையே. 401

பட்ட ராகிலென் சாத்திரங் கேட்கிலென்
இட்டு மட்டியு மீதொழில் பூணிலென்
எட்டு மொன்று மிரண்டும் அறியிலென்
இட்ட மீச னெனாதவர்க் கில்லையே. 402

வேத மோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி அங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே. 403

காலைசென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வியடைந்தது வேட்கிலென்
ஏல ஈசனென் பார்க்கன்றி கில்லையே. 404

கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி இரும்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவான் நோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றிநன் கில்லையே. 405

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே. 406

நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி இருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி யில்லையே. 407

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே. 408

மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்
பொற்றை யுற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க் குப்பய னில்லையே. 409

திருச்சிற்றம்பலம்.

பொது

## ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. 410

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாம் திருமுறை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

# ஆறாந் திருமுறை

**கோயில்** **பெரியதிருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 411

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 412

**திருவதிகை வீரட்டானம்** **போற்றித்திருத்தாண்டகம்**

எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங்கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி 413

திருச்சிற்றம்பலம்.

திருவதிகை வீரட்டானம் *    (திருவடிகள்) திருவடித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
அருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழுது சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணா மடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும் மடி
திரைவிரவு தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 414

கொடுவினையா ரென்றுங் குறுகா வடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் மடி
படுமுழவம் பாணி பயிற்றும் மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த வடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருதும் மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தா னடி
நிறைகெடில வீரட்டம் நீங்கா வடி. 415

வைதெழுவார் காமம்பொய் போகா வடி
வஞ்ச வலைப்பாடொன் றில்லா வடி
கைதொழுது நாமேத்திக் காணும் மடி
கணக்கு வழக்கைக் கடந்த வடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும் மடி
நீள்விசும்பை ஊடறுத்து நின்ற வடி
தெய்வப் புனற்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 416

---

* நாயனார் இத்திருத்தலத்தில் திருத்தொண்டியற்றும் நாள்களில், திருவடிப் பெருமையை விளக்கும் இத்திருவடித் திருத்தாண்டகத்தைத் தம் உளத்து மீதூர்ந்த பேரன்பினால் அருளிச் செய்தார்

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் மடி
அழகெழுத லாகா அருட்சே வடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த வடி
சோமனையும் காலனையுங் காய்ந்த வடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல வடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 417

ஒருகாலத் தொன்றாகி நின்ற வடி
ஊழிதோ றூழி உயர்ந்த வடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் மடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல வடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும் மடி
இன்புற்றார் இட்டபூ ஏறும் மடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 418

திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவ் வடி
உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வா வடி
உருவென் றுணரப் படாத வடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 419

உரைமாலை யெல்லா முடைய வடி
உரையா லுணரப் படாத வடி
வரைமாதை வாடாமை வைக்கும் மடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும் மடி
அரைமாடு திரையி லடங்கும் மடி
அகலம் அளக்கிற்பா ரில்லா வடி
கரைமாங் கலிக்கெடில் நாடன் னடி
கமழ்வீரட் டானக் காபாலி யடி 420

நறுமலராய் நாறும் மலர்ச்சே வடி
நடுவா யுலக நாடாய வடி
செறிகதிருந் திங்களுமாய் நின்ற வடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்த வடி
மறுமதியை மாசு கழுவும் மடி
மந்திரமுந் தந்திரமும் ஆய வடி
செறிகெடில நாடர் பெருமா னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி 421

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
அடியார்கட் காரமுத மாயவடி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல வடி
பற்றற்றார் பற்றும் பவள வடி
மணியடி பொன்னடி மாண்பா மடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல வடி
தணிபாடு தண்கெடில நாடன் னடி
தகைசார் வீரட்டத் தலைவன் னடி. 422

அந்தா மரைப்போ தலர்ந்தவ் வடி
அரக்கனையும் ஆற்ற லழித்தவ் வடி
முந்தாகி முன்னே முளைத்தவ் வடி
முழங்கழலாய் நீண்டஎம் மூர்த்தி யடி
பந்தாடு மெல்விரலாள் பாகன் னடி
பவளத் தடவரையே போல்வா னடி
வெந்தார் சுடலைநீ றாடும் மடி
வீரட்டங் காதல் விமலன் னடி. 423

திருச்சிற்றம்பலம்.

**திருக்காளத்தி** **திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்

புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யான் அவனென் கண்ணு ளானே.
424

திருநல்லூர் திருத்தாண்டகம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 425

திருக்கருகாவூர் திருத்தாண்டகம்

வித்தாம் முளையாகும் வேரே தானாம்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமு மாம்பரஞ் சோதி தானாம்
தொத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றாதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணா காட்டுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 426

திருப்பூவணம் திருத்தாண்டகம்

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்

இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 427

திருஆலவாய் திருத்தாண்டகம்

முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 428

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 429

திருநள்ளாறு திருத்தாண்டகம்

குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பாலானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 430

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
இராவணனை யிருபதுதோள் நெரிய வூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
உற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை
மறவாதார் மனத்தென்றும் மன்னி னானை
மாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறுவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 431

திருமறைக்காடு — திருத்தாண்டகம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 432

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 433

திருவாரூர் — திருத்தாண்டகம்

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி

அயிரா வணமேறாது ஆன்ஏறு ஏறி
அமரர்நா டாளாதே ஆரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே. 434

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவாவண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட் டேனே. 435

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. 436

**திருவாரூர்** **திருத்தாண்டகம்**

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்கு
இல்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்நல் ஆரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்.
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே. 437

திருவாரூர் திருத்தாண்டகம்

திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 438

திருவாரூர் திருத்தாண்டவம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 439

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே. 340

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்க ளுண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 441

வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 442

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 443

---

* இத்திருப்பதிகத்தில் 108 முறை "போற்றி" பயின்று வருவதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. இது தினமும் திருவாரூர்த் தியாகேசர் சந்நிதியில் பூசைக்காலத்தில் ஓதப் பெறுவது. போற்றி - வணக்கம்.

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 444

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 445

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் கணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 446

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி

நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 447

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 448

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 449

பிரமன்தன் சிரமரித்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 450

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 451

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 452

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 453

திருநெய்த்தானம் திருத்தாண்டகம்

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக

முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 454

திருப்பூந்துருத்தி திருத்தாண்டகம்

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாம் கற்பித் தானைக்
காணா தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. 455

திருஆவடுதுறை திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே. 456

மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
மேற்றான்நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே. 457

நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
நாடோறும் நின்கழலே யேத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்றா லென்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒலிதிரைநீர்க் கடல்நஞ்சுண் டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே. 458

**திருப்புள்ளிருக்குவேளூர்** **திருத்தாண்டகம்**

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 459

**திருக்கயிலாயம் *** அருச்சனை **போற்றித்திருத்தாண்டகம் (1)**

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி.
கயிலை மலையானே போற்றி போற்றி. 460

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 461

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 462

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 463

---

* நாயனார் கயிலை செல்லும் ஆர்வம் கொண்டு செல்லுகையில் பல துன்பங்களை அடைந்திருந்த நிலையில் எதிரே ஒரு முனிவராகத் தோன்றிய இறைவரிடம் " ஆளும் நாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்றார். நாயனாரது மன உறுதியைக் கண்ட இறைவர் "இப் பொய்கையில் மூழ்கி நம்மை நீ கயிலையிலிருந்த அம்முறையைத் திருவையாற்றில் காண்" என்றார். நாயனாரும் அவ்வண்ணம் மூழ்கி திருவையாற்றில் ஒரு வாவியில் எழுந்து, வள்ளலார் கயிலையிலிருந்த கோலங் கண்டு தொழுது பாடியருளியன. இது முதல் மூன்று திருப்பதிகங்கள் கயிலைமலையானையே போற்றியருளியதால் இம்மூன்றும் கயிலைத் திருப்பதிகங்களாயின. இவற்றுள் பலவிடத்தும் இறைவன் தமது சிந்தையின்கண் நின்றமையை வலியுறுத்தியது; கயிலைபோல, உடம்பிற் கயிலை உள்ளம் என்பது உணர்த்துதற் பொருட்டேயாம். இது சிவ அர்ச்சனைக்குந்த பதிகம்.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 464

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 465

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 466

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 467

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 468

நெடியவிசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.
469

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக் கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின் சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.
470

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்கா தென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 471

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கனியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 472

மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 473

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி

சுடரின் திகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 474

மைசேர்ந்த கண்டமிடற்றாய் போற்றி
மாலுக்கும் ஓராழி யீந்தாய் போற்றி
பொய் சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடீ போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசே ரனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 475

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமையே ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 476

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோர்விண் ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி
தொழில்நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 477

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 478

செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 479

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடி தாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 480

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயம் போற்றித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி

ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 481

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர்மெய் பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி
என்றும்மீ ளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 482

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வமுடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 483

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெல்லாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 484

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
ஏழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 485

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
ஏகமா முண்டி யுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி: 486

எண்மேலும் எண்ண முடையாய் போற்றி
ஏறறிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடி யாழ்வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொான் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 487

முடியார்சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தீ போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 488

போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 489

திருச்சிற்றம்பலம்.

இறைவன் : பரமசிவன் இறைவி : பார்வதியம்மை

**திருக்கன்றாப்பூர்** **திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 490

**திருவானைக்கா** **திருத்தாண்டகம்**

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே. 491

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே. 492

**திருவாய்மூர்** **திருத்தாண்டகம்**

பாடஅடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல் கண்டேன் கங்கை யாளைக்
கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 493

**திருவாலங்காடு** **திருத்தாண்டகம்**

ஒன்றா வுலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே
கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே
திருவாலங் காடுறையும் செல்வர் தாமே 494

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
அந்தியுஞ் சந்தியு மானார் தாமே
சொல்லும் பொருளெலா மானார் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மானார் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுறைஞ் செல்வர் தாமே. 495

திருமறைக்காடு திருத்தாண்டகம்

மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 496

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரம் திருத்தாண்டகம்

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே. 497

பொது　　　　திருத்தாண்டகம்

தந்தையார் தாயார் உடன்பி றந்தார்
　　தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
　　மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
　　திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
　　என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே. 498

திருச்சிற்றம்பலம்.

பொது *　　　　நின்ற திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
　　இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
　　ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
　　பிறருருவும் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
　　நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே. 499

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
　　வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
　　கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணு மாகிப்
　　பிரளயத்துக் கப்பால் ஓர் அண்ட மாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்து மாகி
　　எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 500

* வடமொழி வேதத்தின் இருதயமாக விளங்கும் ஸ்ரீருத்திரம், தமிழ்மொழியில் அப்பர் பெருமானால் நின்ற திருத் தாண்டகமாக அருளப்பெற்றுள்ளது. அதனை உருத்திரத் திருத்தாண்டகம் என்றே அழைக்கலாம். மறைப்பயனாகிய உருத்திரம் என்பர் சேக்கிழார் இதனை அன்புடன் ஓத முத்தி நிச்சயம். இதனை ஓதியே உருத்திர பசுபதி நாயனார் திருவடி சேர்ந்தார். உபாசனைக்குரிய இது சிவபெருமானின் விசுவ ரூபத்தைச் சொற்களால் விவரித்து வணக்கம் கூறுவதேயாகும்.

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய் கால்ஆறாய்க் கழியு மாகிக்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றும் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. 501

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பின் உச்சி யாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 502

தீயாகி நீராகித் திண்மை யாகி
திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகி
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறும் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ் சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. 503

அங்கமாய் ஆதியாய் வேத மாகி
அருமறையோடு ஐம்பூதம் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகி
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 504

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித் தோலாடைக் குழக னாகி
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மென்நினைந்தார்க்கு எளிதே யாகி
அழல்வண்ண வண்ணர்தாம் நின்ற வாறே. 505

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி அவியு மாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகி
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாகி நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய் சென்றடிகள் நின்ற வாறே. 506

நீராகி நீள்அகலம் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பின் உச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லஎம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ் சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. 507

மாலாகி நான்முகனாய் மாபூ தமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி எண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ் சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 508

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. 509

வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி
அனலாடி ஆன்அஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே. 510

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே. 511

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ் சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங்கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை

நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங்கடவு ளானே. 512

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப்பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே. 513

திருநாமம் அஞ்செழுத்தும்செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. 514

நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னினல்லால்
ஏழையேன் என்சொல்லி யேத்து கேனே. 515

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே. 516

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல் லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே. 517

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. 518

திருச்சிற்றம்பலம்.

பொது வினாவிடைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன்ஓ ருவம னில்லி

அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே. 519

பொது மறுமாற்றத்திருத்தாண்டகம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. 520

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே 521

திருப்புகலூர் * திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்

ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 522

அங்கமே பூண்டாய் அனலாடி னாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடையி னாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே 523

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவறுத் தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 524

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 525

---

* நாயனார் தமது 81 ஆவது வயதில் திருப்புகலூரில் தங்கியிருந்து சிவதொண்டு செய்த நாள்களில் இறைவர் வருவித்துக் காட்டிய பொன். மணி முதலியனவற்றையும் அரம்பையரையும் நீக்கிய பின்பு இத்திருப்பதிகத்தைப் பாடியருளியபடி சித்திரைச் சதயத் திருநாளில் நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்டிங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டனங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 526

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 527

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கட வுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 528

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறையுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 529

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னணையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
அக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 530

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுத்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 531

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது

இறைவன் : அக்கினீசுரர் இறைவி : கருந்தார்க்குழலி

ஆறாந்திருமுறை முற்றுப்பெற்றது.

## திருநாவுக்கரசு நாயனார் புராண சாரம்

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில் குறுக் கையரதிபர் புகழ னார்பால்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றி யமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரரு டரவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.

வந்துதமக் கையரருளா னீறு சாத்தி
வண்டமிழா னோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம் வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
அந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
அருட்காசு பெற்று மறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னாரே.

உமாபதி சிவாச்சாரியார்

திருநாவுக்கரசருக்கு மங்களம் (நற்சிந்தனை)

உ

சிவமயம்

**சுந்தரமூர்த்தி நாயனார்**

அருளிச் செய்த

# தேவாரம்

## ஏழாந் திருமுறை

**திருவெண்ணெய்நல்லூர் *** **இந்தளம்**

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 532

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே. 533

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட் டுறையுள்
அன்னேஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 534

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூருரட் டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 535

---

* இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட போது "நீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்றருளிப் பின்னும் "முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந்தனை; ஆதலாலே என் பெயர் பித்தன் என்றே பாடுக" என்றருளிச் செய்ய, நாயனார் பாடியதாகும் இத்திருப்பதிகம்.

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியாய்
ஆதன்பொரு ளானேன்அறி வில்லேன் அருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 536

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணாஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 537

ஊனாய்உயி ரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 538

ஏற்றார்புரம் மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வான்நீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாவுனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 539

மழுவாள்வலன் ஏந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அழகாஉனக் காளாயினி அல்லேன்என லாமே. 540

காரூர்புக லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்என லாமே. 541

திருச்சிற்றம்பலம்.

திருக்கலயநல்லூர் தக்கராகம்

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர்காணே. 542

திருக்கோளிலி நட்டராகம்

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே. 543

திருக்கழிப்பாலை நட்டராகம்

எங்கே னும்மிருந் துன்னடி யேன்உ னைநினைந்தால்
அங்கே வந்தென்னொடும் முட னாகி நின்றருளி
இங்கே என்வினையை யறுத்திட்டெ னையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. 544

திருமழபாடி நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக் கேனே. 545

பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 546

**திருக்குருகாவூர்வெள்ளடை** **நட்டராகம்**

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 547

**திருக்கோடிக்குழகர்** **கொல்லி**

கடிதாய்க்கடற் காற்றுவந் தெற்றக் கரைமேல்
குடிதான்அய லேஇருந் தாற்குற்ற மாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர
அடிகேள் உமக்கார் துணையா இருந்தீரே 548

**திருப்புகலூர்** **கொல்லி**

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே. 549

**திருவதிகைவீரட்டானம்** **கொல்லிக்கௌவாணம்**

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்து
அம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 550

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 551

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 552

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்

---

* நாவலூரர் திருவாரூரில் பரவையாரை மணந்து இருக்கும்போது ஒருநாள் திருக்கோயிலுக்குச் செல்லும் வழியில் தேவாசிரிய மண்டபத்துள்ள சிவனடியார்களைப் பார்த்து இவர்க்கு யான் அடியேனாகப் பண்ணு நாள் எந்தநாள் என்று பரமர் தாள் பரவினார். அப்போ சிவபெருமான் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் " என்று எல்லையில் வண்புகழாளரை எடுத்திசை என்ன வன்றொண்டரும் தூரத்தே நின்று திருக்கூட்டத்தைப் பலமுறை தொழுது, தாழ்ந்தெழுந்து, எல்லார்க்கும் தனித்தனி வேறு அடியேன் என்று இத் திருப்பதிகத்தை அருளிச்செய்தார். இது திருத்தொண்டர்களின் வரலாறு., பண்பு முதலியவற்றைத் தொகுத்துக் கூறுகின்றது. இத்திருப்பதிகமே சேக்கிழார் நாயனார் பாடிய திருத்தொண்டர் புராணத்துக்கு முதனூலாயமைந்தது. யாழ் நாவலர் பெருமான் யாவரும் காலையில் எழுந்தவுடன் முதற்காரியமாக இயற்கை சுத்தி செய்தவுடன் விபூதி தரித்து, சிவபெருமானைத் தியானித்து தோத்திரம் செய்து கொண்டு இத்திருப்பதிகத்தைப் பாராயணஞ் செய்து வருதல் உத்தம புண்ணியமாகும் என எழுதியுள்ளார்.

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 553

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 554

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 555

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 556

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 557

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 558

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 559

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 560

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு வப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. 561

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது.

இறைவன் : வன்மீக நாதர் இறைவி : அல்லியங்கோதை

**திருநாகைக்காரோணம்** **கொல்லிக்கௌவாணம்**

திருச்சிற்றம்பலம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரிகமழ் சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 562

**ஊர்த்தொகை** **பழம்பஞ்சுரம்**

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர ரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே. 563

திருச்சிற்றம்பலம்

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. 564

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை என்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
565

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாள்இவை என்றலாற்கரு தேன்கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
566

எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந் திழி காவிரி யதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
567

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள் நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
568

ஏடு வான்இளந் திங்கள் சூடினை என்பின் கொல்புலித்தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
569

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்தாடு பாண்டிக்கொடுமுடி
விரும்பனேஉனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
570

செம்போ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
571

சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை தம்பி ரான் என்பொன் மாமணீயென்று
பேரெ ணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.
572

கோணிய பிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லுவார்க்கில்லைதுன்பமே.
573

திருச்சிற்றம்பலம

இது கொங்கநாட்டிலுள்ளது.

இறைவன் : கொடுமுடிநாதர் — இறைவி : பண்மொழியம்மை

திருவாரூர் பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

பத்திமையு மடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுஇதனைப் பொருளறிந்தேன் போய்த் தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 574

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 575

திருவாலங்காடு பழம்பஞ்சுரம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடா உன்னடியார்க் கடியேன் ஆவேனே. 576

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர் மயானம் பழம்பஞ்சுரம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.
577

திருவொற்றியூர் தக்கேசி

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான் அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. 578

திருச்சிற்றம்பலம்

திருபுன்கூர் தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 579

வையக முற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளும்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 580

ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர்கோன் உற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோலவெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்த சண்டிக்குன்
சடைமிசை மலர் அருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 581

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே. 582

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவ்வுசுற் றிக்கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண்ட வர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 583

இயக்கர் கின்னரர் ஞமனொடு வருணன்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்

அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
யர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 584

போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்
பொழில்கொளால் நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 585

மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமு ழாமுழக் கவ்வருள் செய்த
தேவ தேவநின் திருவடியடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 586

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயத்
தவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து
எறியு மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. 587

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடையானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானை
உம்ப ராளியை உமையவள்கோனை
ஊரன் வன்றொன்டன் உள்ளத் தாலுகந்து
அன்பினாற் சொன்ன அருந்தமி ழைந்தோடு
ஐந்தும் வல்லவர் அருவினை யிலரே. 588

திருச்சிற்றம்பலம்

இது சோழ நாட்டிலுள்ளது

**இறைவர் : சிவலோகநாதர்** **இறைவி : சொக்கநாயகியம்மை**

**திருக்கழுமலம்** **தக்கேசி**

திருச்சிற்றம்பலம்

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கொர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தஎம் மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 589

**திருவாரூர்** **தக்கேசி**

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை

இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
        எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
        ஆரு ரானை மறக்கலு மாமே. 590

திருச்சிற்ம்பலம்

திருக்கச்சியேகம்பம் * தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுது செய்தானை
        ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
        சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
        என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம் மானைக்
        காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 591

உற்ற வர்க்குத வும்பெரு மானை
        ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
        பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள்உமை நங்கை
        ஆத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பன்எம் மானைக்
        காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 592

---

* சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரிலே சங்கிலியாரைத் திருமணம் செய்தபோது மகிழடியில் செய்து கொடுத்த ஆணையை மீறித் திருவாரூருக்குப் புறப்பட்டார். உடனே இரண்டு கண்களும் மறைந்தன. திருக்காஞ்சிக்குச் சென்று திருக்கச்சியேகாம்பர நாதரை வணங்கி இடக் கண்ணைப் பெற்றார். அப்போ பாடப் பெற்றது இத்திருப்பதிகம். இதனை நியமாக ஓதுபவர் கண் குற்றமெல்லாம் நீங்கப் பெறுவர்.

திரியும் முப்புரந் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேல்திகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித்தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 593

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் பும்மலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்உமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ட நஞ்சுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 594

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலைநஞ் சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அரும றையவை அங்கம்வல் லானை
எல்லை யில்புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 595

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன்எம் மானை
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 596

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
        வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
        நாளும் நாமுகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
        என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பன்எம் மானைக்
        காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 597

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
        சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
        பாலொ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
        ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன்எம் மானைக்
        காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 598

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
        வாலி யபுர மூன்றெரித் தானை
நிரம்பி யதக்கன் றன்பெரு வேள்வி
        நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை
        பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக்
        காணக் கண் அடி யேன் பெற்ற வாறே. 599

எள்கல் இன்றி இமையவர் கோனை
        ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
        வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
        வெருவி யோடித் தழுவவெளிப் பட்ட
கள்ளக் கம்பனை எங்கள்பி ரானைக்
        காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 600

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெரு மான்என்றெப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக்
குளிர்பொ ழில்திரு நாவல்ஆ ரூரன்
நற்ற மிழிவை ஈரைந்தும் வல்லார்
நன்னெ றிஉல கெய்துவர் தாமே. 601

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டை நாட்டிலுள்ளது.

இறைவர் : ஏகாம்பர நாதர் இறைவி : காமாட்சியம்மை

**திருக்கோலக்கா** **தக்கேசி**

திருச்சிற்றம்பலம்

புற்றில் வாளர வார்த்த பிரானைப்
பூத நாதனைப் பாதமே தொழுவார்
பற்றுவான் துணை எனக்கெளி வந்த
பாவ நாசனை மேவரி யானை
முற்ற லார்திரி புரம்ஒரு மூன்றும்
பொன்ற வென்றிமால் வரைஅரி அம்பாக்
கொற்ற வில்அங்கை ஏந்திய கோனைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 602

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 603

திருத்தினைநகர் தக்கேசி

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்ற மில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 604

திருநின்றியூர் தக்கேசி

திருவும் வண்மையும் திண்டிற லரசுஞ்
சிலந்தியார் செய்த செய்பணி கண்டு
மருவு கோச்செங் கணான்றனக் களித்த
வார்த்தை கேட்டுநுன் மலரடி யடைந்தேன்
பெருகு பொன்னிவந் துந்துபன் மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவுந் தெற்றியும் முற்றமும் பற்றித்
திரட்டுந் தென்திரு நின்றியூ ரானே. 605

திருநள்ளாறு தக்கேசி

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொருள் இருள் அறுத் தருளுந்
தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ ஆவணங் காட்டி
அடிய னாஎன்னை ஆளது கொண்ட
நற்ப தத்தைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 606

வடதிருமுல்லைவாயில் தக்கேசி

திருவும் மெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 607

திருமறைக்காடு காந்தாரம்

யாழைப்பழித் தன்னமொழி மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே. 608

திருவானைக்கா காந்தாரம்

மறைக ளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத் திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக்காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 609

திருவையாறு காந்தார பஞ்சமம்

பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன் நான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ.
610

திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரம் * நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 611

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே. 612

அங்கம்மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 613

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே. 614

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 615

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளோடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 616

---

* ஆளுடைய நம்பிகள் திரு இராமேச்சுரத்திலிருந்து தூரத்தேயுள்ள திருக்கேதீச்சரத்தைநோக்கி இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 617

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே. 618

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 619

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத் தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.
620

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றம் அருச்சனை நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 621

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையான் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே. 622

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும் எட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையுந் தண்கழுக் குன்றமே 623

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்கு மழுவா ளன்முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மதம் மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 624

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைகள் உண்டு தழுவிக் குட்டி யொடுமுசுக்
கலைகள் பாயும் புறவில் தண்கழுக் குன்றமே. 625

மடமு டைய அடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய அரவன் றான்பயி லும்மிடம்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே. 626

ஊன மில்லா அடியார் நம்மனத் தேஉற
ஞான மூர்த்தி நட்ட மாடிநவி லும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடவே
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்றமே. 627

அந்தம் இல்லா அடியார் நம்மனத் தேஉற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
சந்தம் நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. 628

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
கழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. 629

பல்லின் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடம்
கல்லின் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவாரைத் தொழு மின்களே. 630

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது

இறைவன் : வேதகிரீச்சுவரர் இறைவி : பெண்ணினல்லாள்

**திருவாரூர்** **புறநீர்மை**

திருச்சிற்றம்பலம்

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. 631

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலரிட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றன் மணங்கமழுந் தென்திரு வாரூர்புக்
கென்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே 632

**திருக்கூடலையாற்றூர்** **புறநீர்மை**

வடியுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 633

**திருவெண்பாக்கம்** **சீகாமரம்**

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே ப்டலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர்என்றானே.
634

இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணம்என்பேன்
நடையுடையன் நம்மடியான் என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்தோல்
உடையுடையான் எனையுடையான் உளோம் போகீர் என்றானே.
635

செய்வினையொன் றறியாதேன் திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தா யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லான் உளோம் போகீர் என்றானே. 636

**கோயில்** **குறிஞ்சி**

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரிஅகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.
637

திருச்சிற்றம்பலம்

**கோயில்** **குறிஞ்சி**

பாருரும் அரவல்குல் உமைநங்கை யவள்பங்கன்
பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில்
அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே
பெற்றா மன்றே. 638

திருச்சிற்றம்பலம்

திருவாரூர் *　　　　　　　　　　செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 639

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே. 640

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே. 641

துருத்தி யுறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே யெனவேண்டா
அருத்தியுடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்து போதீரே. 642

செந்தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே- 643

---

* நம்பியாரூரர் திருக்காஞ்சியில் இடக்கண் பெற்று பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்று சேர்ந்தார். திருக்கோயிலினுட் சென்றபோது இறைவனை வணங்க ஒரு கண் போதாமையால் வருந்தினார். அப்போ இத்திருப்பதிகத்தைப் பாட வலக்கண்ணையும் பெற்றார். இதனை ஒதுபவர் கண்ணைப் பொறுத்த எவ்வகை நோயும் நீங்கப் பெறுவார்.

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே. 644

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. 645

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 646

பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 647

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 648

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 649

திருச்சிற்றம்பலம்

திருநொடித்தான்மலை (ஸ்ரீ கயிலாயம்) * பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அத றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த யானை அருள் புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. 650

ஆனை உரித்தபகை அடி யேனொடு மீளக் கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளி யானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ் செய்தெனை யேறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித் தான் மலை உத்தமனே. 651

மந்திரம் ஒன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரி சேசெயுந் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழ கானை யருள் புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித் தான்மலை உத்தமனே 652

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தவென்னை அது மாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித் தான்மலை உத்தமனே. 653

மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்ட னேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித் தான் மலை உத்தமனே. 654

---

* சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானால் அனுப்பப்பெற்ற வெள்ளை யானையின் மேல் ஏறிக்கொண்டு திருக்கயிலாய மலைக்கு எழுந்தருளினார். அப்போது இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார். சிவாஞ்ஞையினாலே செம்பொற்றிருக் கோயினுள்ளே சென்று சுவாமி சந்நிதானத்தினிலே விழுந்து வணங்கினார். நாயனார் ஆலாலசுந்தரராகித் தாம் முன்னெ செய்த தொண்டைச் செய்பவரானார். தாம் அருளிச் செய்த இத்திருப்பதிகத்தை வருணனிடம் கொடுக்க அவன் அதைத் திருவஞ்சைக்களத்திலே சேர்த்தான். தேவாரத் திருமுறைகளை நிறைவு செய்யும் பெருமையும் இத்திருப்பதிகத்துக்குண்டு.

அஞ்சினை ஒன்றிநின்று அலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே வைகி வானநன் னாடர் முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்ட னேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித் தான் மலை உத்தமனே. 655

நிலைகெட விண்ணதிர நிலம் எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழி யேவரு வேனெதிரே
அலை கடலால் அரையன் அலர் கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித் தான்மலை உத்தமனே.
656

அரவொலி ஆகமங்கள் அறி வார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெ லாம்வந் தெதிர்ந் திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித் தான்மலை உத்தமனே. 657

இந்திரன் மால்பிரமன் னெழி லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்த யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித் தான் மலை உத்தமனே. 658

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன் நொடித்தான் மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை நாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சை யப்பர்க் கறிவிப்பதே. 659

திருச்சிற்றம்பலம்.

இது வடநாட்டிலுள்ளது

இறைவன் : பரமசிவன் இறைவி : பார்வதியம்மை.

ஏழாந்திருமுறை முற்றுப்பெற்றது.

## சுந்தரமூர்த்தி நாயனார் புராண சாரம்

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர் வாழ்
சைவனார் சடையனார் தனயனாராய்
மண்புகழ வருட்டுறையா னோலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டர், அதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய, ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோ ணயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருள்ஆற் றிட்டுத்
தடத்தெடுத்துச், சங்கிலிதோள் சார்ந்து, நாதன்
ஒப்பிறனித் தூதுவந்து ஆறூடு கீறி,
உறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி, அருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.

- உமாபதி சிவாசாரியார்

சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்-(நற்சிந்தனை)

உ

சிவமயம்

**மாணிக்கவாசக சுவாமிகள்**

அருளிச் செய்த

திருவாசகம், திருக்கோவையார்

# திருவாசகம்

## எட்டாந் திருமுறை

### 1.சிவபுராணம்
### திருப்பெருந்துறையில் அருளியது

(சிவனது அநாதி முறைமையான பழைமை)

**கலிவெண்பா**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி;
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி;
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி;
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி;
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி;

ஆராத இன்பம் அருளுமலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த், தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

(660)

திருச்சிற்றம்பலம்.

# 2. கீர்த்தித் திருவகவல்

திருத்தில்லையில் அருளியது

(சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை)

**(நிலைமண்டில ஆசிரியப்பா)**

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியு மழித்தும்

என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டு மின்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை உய்யக்

கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்று
ஈண்டு கனக மிசையப் பெறாஅது
ஆண்டா னெங்கோன் அருள்வழி யிருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்தினிது அருளித்

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீரப் பந்தர் சயம் பெறவைத்து
நன்னீர்ச் சேவக னாகிய தன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்

குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்கு
அட்டமா சித்தி யருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட இருந்தும்

தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனி லீண்ட விருந்து

படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னி லிடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையி லெழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்

துருத்தி தன்னி லருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல அருளியும்

குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண்டு
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்

தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

அந்தமில் பெருமை அருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்

ஆனந் தம்மே யாறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்

பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

அப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்

ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதா ரெரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

நாத நாத என்றழு தரற்றிப்
பாதம் எய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்று
இதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்

பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்கு
அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவ னீண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே. (661)

திருச்சிற்றம்பலம்

## 3. திருவண்டப் பகுதி
## திருத்தில்லையில் அருளியது

(சிவனது தூல சூக்குமத்தை வியந்தது)

## இணைக் குறளாசிரியப்பா

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்

சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து

எறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்

கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடொறும்
அருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு

மதியிற் றண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழல்திகழ்
நீரி னின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட

மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்று
எனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க

ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க

அன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க

சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையி லையோன் காண்க

இணைப்பரும் பெருமையி லீசன் காண்க
அரியதி லரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலோடு கீழாய் விரிந்தோன் காண்க

அந்தமு மாதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு 'மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க

தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க

புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானு முடனே காண்க

பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய

வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெரும் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட

எஞ்சா வின்னருள் நுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்

தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப் பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்து

ஊழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்து
உருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க

எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி, நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடா அய்
நிற்பன நிறீஇச்

சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படா அன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கும்

ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்

திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்

இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்

ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்

ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்தும்

தன்னே ரில்லோன் றானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்டு

அலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்

ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்று
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்

ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செந்தே னடியேற்கு

அருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்

தேக்கிடச்செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவது

உள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்கு
அள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்தேன் கலக்க

அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

## 4. போற்றித் திருவகவல்

### திருத்தில்லையில் அருளியது

(சகத்தின் உற்பத்தி)

### நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியு மாதர வதனிற்

கடுமுரண் ஏன மாகி முன்கலந்து
ஏழ்தல முருவ இடந்து பின்னெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்

இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களின் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்

ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்துங்

ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து

உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போல

தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்து
ஆடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்

சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரம அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து

குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியாது அத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

கூட லிலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி

மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றெனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

கடையே னடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி

அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பாராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப் பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி

குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி

களங் கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலை நாடுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலைய்யே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி

செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி (663)

திருச்சிற்றம்பலம்.

# திருச்சதகம்

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே
664

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கிழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையி னேற்கே 665

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே 666

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாம் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. 667

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன்றறியேனே
668

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி 669

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி 670

திருச்சிற்றம்பலம்

## நீத்தல் விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.
671

திருச்சிற்றம்பலம்

## திருவெம்பாவை
## திருவண்ணாமலையில் அருளியது

(சத்தியை வியந்தது)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 672

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 673

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 674

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

675

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 676

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.
677

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் 678

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் 679

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய். 680

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் 681

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாட செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய் 682

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 683

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 684

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 685

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 686

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 687

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.
688

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 689

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங்காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய் 690

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய் 691

திருச்சிற்றம்பலம்.

# திருவம்மானை

(ஆனந்தக்களிப்பு)

திருச்சிற்றம்பலம்

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பல மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய் 692

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய் 693

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய் 694

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற்சுண்ணம்

(ஆனந்த மனோலயம்)

## திருத்தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 695

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 696

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 697

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 698

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 699

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 700

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 701

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 702

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 703

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 704

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 705

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 706

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 707

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 708

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கன் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 709

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடி
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 710

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 711

அயன்தலை கொண்டுசென் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 712

வட்ட.மலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே. 713

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 714

திருச்சிற்றம்பலம்

## திருக்கோத்தும்பி

திருச்சிற்றம்பலம்

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ 715

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசும்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 716

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ 717

## திருத்தெள்ளேணம்

திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ 718

## திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ 719

## திருப்பூவல்லி

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ 720

எந்தையெந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம்அறுத் தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ. 721

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டான்என் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ 722

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 723

## திருத்தோணோக்கம்

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவாறு
எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ. 724

திருச்சிற்றம்பலம்

# திருப்பொன்னூசல்
## அருட்சுத்தி
(திருத்தில்லையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ 725

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங்கு இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ. 726

முன்னீறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 727

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ. 728

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக்கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ. 729

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 730

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 731

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ. 732

தெங்குலவுசோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 733

திருச்சிற்றம்பலம்

## அன்னைப்பத்து

திருச்சிற்றம்பலம்

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும். 734

## குயிற்பத்து

கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்துநின்ற தொன்மை
ஆதி குணமொன்றுமில்லான் அந்தமி லான்வரக் கூவாய். 735

ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலிசூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய் 736

திருச்சிற்றம்பலம்.

## திருப்பள்ளியெழுச்சி
## திரோதான சுத்தி

(திருப்பெருந்துறையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே. 737

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங்கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 738

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே. 739

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலிகூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 740

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம்உனைக் கண்ட றிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 741

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 742

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 743

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும்காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 744

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 745

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 746

திருச்சிற்றம்பலம்.

## கோயில் மூத்த திருப்பதிகம்

### அநாதியாகிய சற்காரியம்

(திருத்தில்லையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே. 747

முன்னின்று ஆண்டாய் எனைமுன்னம் யானும்
அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட்
டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று போந்திடு
என்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ பொன்னம்
பலக்கூத் துகந்தானே. 748

உகந்தா னேஅன் புடையடிமைக் குருகா
உள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால் தக்க
வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ
வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன் பொன்னம்
பலத்தெம் முழுமுதலே. 749

முழுமுத லேஐம் புலனுக்கும் மூவர்க்
கும்என் தனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள்
வான் குழுமிக்
கெழுமுத லேஅருள் தந்திருக்க இரங்குங்
கொல் லோஎன்று
அழுமது வேயன் றிமற்றென் செய்கேன்
பொன்னம் பலத்தரைசே. 750

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே
என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி
கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப் பேசா
திருந்தால் ஏசாரோ. 751

ஏசா நிற்பர் என்னைஉனக் கடியான்
என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும் பேணா
நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ
லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும் எந்தாய்
இனித்தான் இரங்காயே. 752

இரங்கும் நமக்கம் பலக்கூத்தன் என்றென்று
ஏமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வார்
இலிமாடு ஆவேனோ
நெருங்கும் அடியார் களும்நீயும் நின்று
நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள் வாழ்வே
வாவென் றருளாயே. 753

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல்
என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே
பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து வருந்து
வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல் செத்தே
போனாற் சிரியாரே. 754

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு
திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறு
இருந்துஉன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா
என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி
இனித்தான் நல்காயே. 755

நல்கா தொழியான் நமக்கென்றுன் நாமம்
பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா
மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப்
பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய்
என்னை உடையானே. 756

திருச்சிற்றம்பலம்.

# கோயில் திருப்பதிகம்

## அநுபோக இலக்கணம்

(திருத்தில்லையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 757

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே 758

அரைசனே அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. 759

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா வுயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 760

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே. 761

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்டின்றே. 762

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. 763

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருறவு எனக்கிங்கு ஆர் அய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ. 764

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 765

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே. 766

திருச்சிற்றம்பலம்

## புணர்ச்சிப்பத்து

திருச்சிற்றம்பலம்

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை

நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 767

## வாழாப்பத்து

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை: யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 768

பாவநா சாஉன் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 769

## அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 770

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 771

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 772

## திருக்கழுக்குன்றப் பதிகம்
## சற்குருதரிசனம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு மான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 773

மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலம்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக் கேடனேன் இனி

மேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 774

திருச்சிற்றம்பலம்

## கண்டபத்து
### நிருத்த தரிசனம்
(திருத்தில்லையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே. 775

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே. 776

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டனே. 777

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வன்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோரும் காணஎன்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே. 778

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. 779

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. 780

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.

781

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்(கு)
அளவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே. 782

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே 783

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

784

திருச்சிற்றம்பலம்

## குழைத்தபத்து

திருச்சிற்றம்பலம்

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லரால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே. 785

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே. 786

நாயிற் கடையாம் நாயேனை நயந்து
நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட்
டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்ன
தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் கண்ணுதலே. 787

## உயிருண்ணிப்பத்து

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப் புறம்போகலொட் டேனே. 788

## அச்சப்பத்து

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 789

## பிடித்தபத்து

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 790

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 791

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 792

## திருவேசறவு

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 793

## திருப்புலம்பல்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. 794

## அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தனெனக்
கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 795

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 796

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 797

திருச்சிற்றம்பலம்

# திருச்சிற்றம்பலக்கோவை

திருச்சிற்றம்பலம்

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே. 798

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே. 799

ஈசற் கியான்வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை யின்னொளி போன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே. 800

ஆநந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆநந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ் சேர்
ஆநந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆநந்த வெள்ளம்வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே. 801

திருச்சிற்றம்பலம்

எட்டாந் திருமுறை முற்றுப்பெற்றது.

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசகர் வழிபாடு

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத்து என்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேல் ஏறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

- திருவிளையாடற் புராணம்.

திவ்விய மாணிக்கர்க்கு மங்களம் (நற்சிந்தனை)

உ

சிவமயம்

## ஒன்பதாந் திருமுறை

# திருவிசைப்பா

திருமாளிகைத் தேவர் அருளிச் செய்தது

**கோயில்** **பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே! 802

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ !
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே 803

**சேந்தனார் அருளிச் செய்தது**

**திருவீழிமிழலை** **பஞ்சமம்**

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த

மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே. 804

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. 805

### கருவூர்த்தேவர் அருளிச் செய்தது

**திரைலோக்கியசுந்தரம்** **காந்தாரம்**

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. 806

**கங்கைகொண்ட சோளேச்சரம்** **பஞ்சமம்**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 807
அற்புதத் தெய்வம் இதனின் மற் றுண்டே?

அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ஊறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 808

**தஞ்சை இராசராசேச்சரம்** **பஞ்சமம்**

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ!
அங்ஙனே அழகிதோ; அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 809

**பூந்துருத்திநம்பிகாட நம்பி அருளிச் செய்தது**

**திருவாரூர்** **பஞ்சமம்**

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே. 810

கோயில் சாளரபாணி (ஆனந்தபைரவி)

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடையேறி! கூத்தா டரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. 811

திருச்சிற்றம்பலம்.

# திருப்பல்லாண்டு

## சேந்தனார் அருளிச் செய்தது

கோயில் பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 812

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டுகூறுதுமே. 813

சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 814

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 815

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 816

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமும்தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 817

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. 818

திருச்சிற்றம்பலம்

**ஒன்பதாந்திருமுறை முற்றுப்பெற்றது.**

உ

சிவமயம்

## பத்தாந்திருமுறை

## திருமூலநாயனார் அருளிய

# திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்.

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 819

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 820

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. 821

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. 822

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந் தானே 823

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 824

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 825

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே 826

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. 827

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. 828

பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க் காறாக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே. 829

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 830

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. 831

திருச்சிற்றம்பலம்

**பத்தாந் திருமுறை முற்றுப்பெற்றது.**

உ

சிவமயம்

# பதினொராந் திருமுறை

திருவாலவாயுடையார் அருளிச்செய்த

## திருமுகப் பாசுரம்

திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. (832)

**காரைக்காலம்மையார் அருளிச்செய்த**

## திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

**பண் : நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடைஎட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே. 833

பண் : இந்தளம்

எட்டி இலவம் ஈகை சூரைகாரை படர்ந்தெங்கும்
சுட்டசுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர் கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல விழிகட்பேய்
கொட்டமுழவங் கூளிபாடக் குழகன் ஆடுமே. 834

சூடு மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே. 835

## காரைக்காலம்மையார் அருளிச்செய்த
### அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். 836

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. 837

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன். 838

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்உருவம் ஏது 839

நடக்கிற் படிநடுங்கும் நோக்கில் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும் - அடுக்கல்
பொரும்ஏறோ ஆன்ஏறோ பொன்னொப்பாய் நின்ஏறு
உரும்ஏறோ ஒன்றா உரை. 840

**நக்கீரதேவநாயனார் அருளிச் செய்த**

கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி

சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேல்இருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று 841

பெற்ற பயன்இதுவே அன்றே பிறந்தியான்
கற்றவர்கள் ஏத்துஞ்சீர்க் காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்கு
ஆளாகப் பெற்றேன் அடைந்து. 842

திருச்சிற்றம்பலம்

**நக்கீரதேவநாயனார் அருளிச்செய்த**

**திருமுருகாற்றுப்படை**

திருச்சிற்றம்பலம்

**திருப்பரங்குன்றம்**

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை

மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்து

உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

துவர முடித்த துகளறும் உச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுப தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூரர மகளிர் ஆடுஞ் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்

சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா

நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து

எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்

அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்; அதா அன்று

## திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருகின் கடுநடைக்

கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல் கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப

நகைதாழ்வு துயல்வருஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே.

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே, ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலில்
ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபிற் ஐயர்க் கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய தொருகை
அங்குசங் கடாவ ஒருகை இருகை

ஐயிரு வட்டமொ டெ.்.குவலந் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளிபொழிய ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவைசூட்ட ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை நரல

உரம் தலைக்கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே அதா அன்று

## திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நண்பகல்

பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோயின்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்

பருமந் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவோடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ் சிறைப்

புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்

வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெரும் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர் வளியிடைத்

தீஎழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும் இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்ளை மடந்தையொடு சின்னாள்
ஆவினன் குடி அசைத்தலும் உரியன்; அதா அன்று

## திருஏரகம் (சுவாமி மலை)

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதுஅறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்; அதா அன்று

## குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறும்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கான்
குன்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

முடித்த குல்லை இலைஉடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடையிடுபு
சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்

கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே; அதா அன்று

## பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடும் மண்ணி அமைவர
நெய்யொடு ஐயவி அப்பி ஐதுஉரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டு உடை உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபக மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஉற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியோடு இன்இயம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகு ஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறே
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக்காண்தக

முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்தித்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ

ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ

மாலை மார்ப நூல்அறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின் அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரைகுநர் இல்லாப் புலமை யோய்எனக்

குறித்தது மொழியா அளவையில் குறித்துஉடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்துஎன

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி

அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புஉடை நன்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்கும்மதி பலவுடன்

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூஉடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்

கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குருஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று

இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே

(843)

* * *

## நேரிசை வெண்பா

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை. 844

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 845

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை. 846

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 847

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே. 848

அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். 849

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 850

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி 851

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப் படையைப்
பூசையாக் கொண்டே புகல். 852

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும். 853

வேலும் மயிலும் துணை
திருச்சிற்றம்பலம்.

## கபிலதேவநாயனார் அருளிச்செய்த
## மூத்த நாயனார் திரு இரட்டை மணி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை. 854

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. 855

பட்டினத்துப் பிள்ளையார் அருளிச்செய்த

## கோயில் நான்மணிமாலை

நானே பிறந்து பயன்படைத் தேன் அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே. 856

பட்டினத்துப்பிள்ளையார் அருளிச் செய்த

திருவிடைமருதூர் மும்மணிக் கோவை

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன் அம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில் லார்இப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கடவார்பொன் அலர்ந்தகொன்றைத்
தழையார் இடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. 857

நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த

கோயில் திருப்பணியார் விருத்தம்

புண்ணிய னேஎன்று போற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொலாம்புகல் என்னுள் வந்திட்டு
அண்ணிய னேதில்லை அம்பல வாஅலர் திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே. 858

திருச்சிற்றம்பலம்

பதினொராந் திருமுறை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

**பன்னிரண்டாந் திருமுறை**

**சேக்கிழார் நாயனார்**

அருளிச் செய்த

# பெரியபுராணம்

**என்று வழங்கும்**

**திருத்தொண்டர் புராணம்**

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உ ணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் 859

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான் 860

மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார் 861

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் 862

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர்சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்
863

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி 864

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி 865

சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி! என்ன. 866

அண்டர் பிரானும் தொண்டர் தமக் கதிப னாக்கி "அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.
867

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான். 868

மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்
869

அண்ண லேஎனை ஆண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரிஎனப் பணிந்தார். 870

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
“பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்; அடியின்கீழ் இருக்க” என்றார் 871

கூடுமா றருள்கொ டுத்துக் ” குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமும் நீகண்டாநந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை” என்றான் பரவுவார் பற்றாய் நின்றான். 872

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். 873

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில். 874

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால் எற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்
என்பார் 875

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். 876

சோதி முத்தின் சிவிகை சூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றாதி யார்அரு ளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம். 877

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகெனஉரைப்பார். 878

எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தால் கண்டார் 879

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே. 880

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகொலாம். 881

திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாந் திருமுறை முற்றுப்பெற்றது.

* * *

சைவத் திருமுறைத் திரட்டு முற்றிற்று.

**பிற்சேர்க்கை**

## ஈழத்துத் திருப் புகழ்

### கதிர்காமம்

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதானா

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவு பிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

### திருக்கோணமலை (1)

தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன தனதான

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியே மயலூறி

மிகுத்த காமிய னெனப்பாடு ளோரெதிர்
நகைக்கவே யுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகயே யுழைத்தே விடாய்படு கொடியேனைக்

கலக்க மாகவே மலக்கூண்டி லேமிகு
பிணிக்கு ளாகியே தவிகாம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேறவே செயு மொருவாழ்வே

கதிக்கு நாதநீ யுனைத்தேடி யேபுக
முரைக்கு நாயேனை யருட்பார்வை யாகவே
கழற்கு ளாகவே சிறப்பான னாயரு டரவேணும்

மலைக்கு நாயக சிவகாமி நாயக
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை பரன்மகிழ் தருவேளே

வசிட்டர் காசிபர் மகத்தான யோகியர்
ரகத்திய மாமுனி யிடைக காடர்க் கீரனும்
வகுத்த பாவினிற் பொருட்கோல மாய்வரு முருகோனே

நிலைக்கு நான்மறை தவத்தான பூசுரர்
திருக்கோ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே

நிகழ்த்து மேழ்பல கடற்குறை யாகவே
யெடுத்த வேல்கொடு பொடித்துள தாலெறி
நினைத்த காரிய மனு கூலமேபுரி பெருமாளே.

## திருகோணமலை (2)

தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன - தனதான

தொடுத்த வாளென விழித்த மார்முலை
யசைத்து மேகலை மறைத்து முடிக
டுடித்து நேர்கலை நெகிழ்த்து மாவியல் கொளுமாதர்
சுகித்த ஹோவென நகைத்து மேல்விழ
முடித்த வார்குழல விரித்து மேலதழ்
துவர்த்த வாய்சுரு ளடக்கி மால்கொடு வழியேபோய்ப்
படுத்த பாயலி லணைத்து மாமுலை
பிடித்து மார்பொடு மழுத்தி வாயிதழ்
கடித்து நாணமா தழித்த பாவிகள் வலையாலே
வெடித்த தாடகை சினத்தை யோர்கணை
விடுத்து யாகமு நடத்தியே யொரு
மிகுத்த வார்சிலை முறித்த மாயவன் மருகோனே
விரித்து ஞாலம தளித்த வேலனை
யதிர்த்து ஓர்முடி கரத்து லாயனல்
விழித்து காமனை யெரித்த தாதையார் குருநாதா
அடுத்த வாயிர விடப்பணாமுடி
நடுக்க மாமலை பிளக்க வேகவ
டரக்கர் மாமுடி பதைக்க வேயொரு மயில்வீரா
அறத்தில் வாழுமை சிறக்க வேயறு
முகத்தி னோடணி குறத்தி யாளையொ
டருக்கொணாமலை தருக்கு லாவிய பெருமாளே.

## கந்தவனம்

உறவு சிங்கிகள் காம காரிகள்
முறைமசங்கிக ளாசாவேசிகள்
உதடுகன்றிகள் நாணா வீணிகள் நகரேகை

உடைய கொங்கையின் மீதே தூசுகள்
பிணமெனும்படி போய் நீராகிய
உணவையுண்டுடை சோர் கோமாளிகள் கடல்ஞானத்

துறவு நெஞ்சுபோ லாமாபாவிகள்
வறுமை தந்திடு பாழ் மூதேவிகள்
அணிநெருங்கிக லாசாபாசண மடமாதர்

அழகுயர்ந்த பொய் மாயாரூபிகள்
கலவியின்பமே நாவேசோருதல்
அலமலந்தடு மாறாதோர்கதி அருள்வாயே

பறவை என்கிற கூடார் மூவரண்
முறையிடுத்தமர் வானோர் தேறரி
பகழிகுன்றவி காலே நீறெழ ஒருமூவர்

பதநினைத்து விடாதே தான்பெற
அருள்புரிந்த பிரானார் மாபதி
பரவு கந்தசுவாமி கானகம் அதின்மேவும்

குறவர் தங்கள் பிரானே மாமரம்
நெறுநெறென்றடி வேரோடேநிலை
குலைய வெற்றி கொள் வேலே ஏவிய புயவீரா

குயில்கள் அன்றில்கள் கூ கூ கூ என
மலர்கள் பொங்கிய தேன்வீழ் காமிசை
குறவர் சுந்தரி யோடேகூடிய பெருமாளே.

## யாழ்ப்பாணத்து நல்லூர்

தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன - தனதான

பூத்தார் சூடும் கொத்தவர் குழலியர்
பார்த்தால் வேலும் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடும் கட்சர மொடுநமன் - விடுதூதும்
போற்றார் நாளும் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின - ரமுதூறல்
வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நாற்றேய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய் வீசுங் கர்ப்புர மிருகமத - மகிலாரம்
மாப்பூ ணாரம் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங் கெட்டன னுனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட -அருள்வாயே
ஆத்தாண் மாறன் கச்சிக னிகையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி - திரிலோகம்
ஆக்கா யாவும் பற்றிய பரிபுரை
நோக்கா டேனும் செற்றவ டிருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவள் - பெறுசேயே
ஏத்தா நாளும் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழுருடரு - முருகோனே
ஏற்போர் தாம்வந் திச்சையும் மகிழ்வொடு
வாய்ப்பாய் வாழும் பொற்ப்ரபை நெடுமதில்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய - பெருமாளே.

உ

# அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் - எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தரும் தேவருங் காப்பாம் - என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து) 1

அட்ட வசுக்களும் காப்பாம் - எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளும் காப்பாம் - எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து) 2

பிராண னபானனுங் காப்பாம் - என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் - எனக்
கருளை யளிக்கும் குருபரன் காப்பாம் (அத்து) 3

பஞ்சப் புலன்களும் காப்பாம் - என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம் (அத்து) 4

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரங் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம் (அத்து) 5

- யோக சுவாமிகள்

# பன்னிரு திருமுறைகள் பற்றிய குறிப்பான விளக்கங்கள்

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய 3 திருமுறைகள்

முதலாந் திருமுறை
இரண்டாந் திருமுறை
மூன்றாந் திருமுறை
*இம் மூன்று திருமுறைகளுக்கும்*

## திருக்கடைக்காப்பு

எனப் பெயர் வழங்கி வருகிறது.

இம் மூன்று திருமுறைகளிலும்

மொத்தப் பதிகங்கள் :- 384 பாடல்கள்: 4159

* * * * *

## திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய 3 திருமுறைகள்

நான்காந் திருமுறை
ஐந்தாந் திருமுறை
ஆறாந் திருமுறை

*இம் மூன்று திருமுறைகளுக்கும்*

## 'தேவாரம்'

*எனப் பெயர் வழங்கி வருகிறது.*
இம் மூன்று திருமுறைகளிலும்
மொத்தப் பதிகங்கள் 313 பாடல்கள் 3045.

* * * * *

## சுந்தரமூர்த்திநாயனார் பாடியருளியது
## 7 ந் திருமுறை மட்டும்.

இத்திருமுறைக்கு

## 'திருப்பாட்டு'

எனப் பெயர் வழங்கி வருகிறது.
இத் திருமுறையில் வருகின்ற
பதிகங்கள் : 100 பாடல்கள் 1026.

* * * * *

## 8 ந் திருமுறை

## திருவாசகமும், திருக்கோவையாரும்

**மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிச் செய்தவை.**

.திருவாசகப் பாடல்கள் : 656.
திருச்சிற்றம்பலக்கோவையார் : 400.

* * * * *

## 9 ந் திருமுறை

பாடிய ஆசிரியர்கள் ஒன்பது பேர்

1. திருமாளிகைத் தேவர்
2. சேந்தனார்
3. கருவூர்த்தேவர்
4. பூந்துருத்தி காடநம்பி
5. கண்டராதித்தர்
6. வேணாட்டடிகள்
7. திருவாலியமுதனார்
8. புருடோத்தமநம்பி
9. சேதிராயர்.

இத் திருமுறையில்

திருவிசைப்பா
பதிகம் : 29
பாடல்கள். 303

திருப்பல்லாண்டு
பாடல்கள் : 13

# 10 ந் திருமுறை

## 'திருமந்திரம்'

திருமூலதேவர் பாடியருளியது.

மந்திரங்கள் :- 9 பாடல்கள் : 3050

* * * * *

## 11 ந் திருமுறை

12 ஆசிரியர்கள் பாடியருளியது

1. திருவாலவாயுடையார் (சிவபெருமான்)
2. காரைக்கால் அம்மையார்
3. ஐயடிகள் காடவர்கோன்
4. சேரமான் பெருமான் நாயனார்
5. நக்கீரதேவர்
6. கல்லாடதேவர்
7. கபிலதேவர்
8. பரணதேவர்
9. இளம்பெருமானடிகள்
10. அதிராவடிகள்
11. பட்டினத்தடிகள்
12. நம்பியாண்டார் நம்பிகள்.

இத் திருமுறையில் 40 பிரபந்தங்கள், பாடல்கள் 1385 உள.

* * * * *

# 12 ந் திருமுறை

பெரியபுராணம் எனவும் திருத்தொண்டர் புராணம் எனவும் பேசப்படுவது.

தெய்வச் சேக்கிழார் நாயனார் பாடியருளியது

காண்டம் 2 சருக்கம் 13 பாடல்கள் 4253

## மொத்தக் குறிப்பு

பன்னிரு திருமுறைகளிலும் 27 ஆசிரியப் பெருமக்கள்

பாடியருளிய மொத்தப் பாடல்கள் 18290.

உ

# சைவத் திருமுறைகளின் (தமிழ் வேதங்களின்) அருமையும் பெருமையும்.

1) முதல் திருமுறை (முதல் தமிழ் வேதம்) 'தோடு' என்னும் மங்கலச் சொல்லுடன் துவங்குகிறது 'தோடு' என்னும் சொல்லின் முதலில் உள்ள 'த்' எனும் மெய்யெழுத்தை நீக்கினால் எஞ்சி நிற்பது 'ஓ' என்பதாகும். நமது திருமுறைகள் (தமிழ் வேதங்கள்) "ஓ" எனும் எழுத்தில் துவங்குவதாகக் கொள்ள வேண்டும்.

கடைசி பன்னிரண்டாவது திருமுறையாகிய பெரிய புராணத்தின் இறுதிப் பாசுரம் 'ம்' எனும் எழுத்தில் முடிகிறது. எனவே நமது திருமுறைகள் ( தமிழ் வேதங்கள்)பன்னிரண்டும் ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் விரிவே ஆகும்.

2) கயிலாயத்தில் அரங்கேற்றப்பட்டு மண்ணுலகிற்கு வந்தது சேரமான் பெருமான் அருளிய "திருக்கைலாய ஞான உலா." இது பதினோராம் திருமுறையில் உள்ளது.

3) மாலும் பிரமனும் காணா மாட்சிமையுடைய சேவடிகள் தரைமேல் தோய இறைவனைத் தூதுபோக வைத்தது நமது திருமுறைகள் (சுந்தரர் பொருட்டு)

4) காரைக்காலம்மையார் அருளிய மூத்த திருப்பதிகங்கள் அம்மையார் வேண்டுதலின்படி அவர்களை என்புருவாக்கியது. திருஞானசம்பந்தர் அருளிய (திருக்கடைக்காப்பு) பாசுரங்கள் மயிலாப்பூரில் குடத்தில் இருந்த எலும்புகளைப் பெண்ணாக்கியது. (பூம்பாவை வரலாறு)

5) நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருமானுக்கு கோலக்காவில் பொற்றாளம் பெற்றுத் தந்தது.

சமீபத்தில் நடந்த ஓர் அரிய நிகழ்ச்சியை நாம் அனைவரும் தெரிந்து கொள்வது நலம் பயப்பதாகும். தென்னாட்டைச்

சேர்ந்த ஓர் செல்வந்தரின் மகன் பன்னிரண்டு வயதாகியும் பேசவில்லை. எல்லா வகையான மருத்துவமும் செய்து முடித்தும் பேச்சு வரவில்லை. முடிவில் கோலக்காவில் உறையும் பெருமானிடம் ஐயனே! கோலக்கா மேவிய குருமணியே! எங்கள் பிள்ளைக்குப் பேச்சு வருமானால் பொன்னால் தாளம் செய்து வைக்கிறோம் எனப் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

இறைவன் சம்பந்தருக்குப் பொன்னால் ஆன தாளம் வழங்கினார்.பொற்றாளத்தில் ஓசை வரும்படி அம்மையார் அருள்பாலித்தார். இதனால் இத்தலத்து அம்பாள் ஓசை நாயகி எனப்படுகிறார்.

பொற்றாளத்திற்கு ஓசை கொடுத்த பரம்பொருள் அந்தச் சிறுவனுக்கும் பேசும் ஆற்றலை அருளியது. சிறுவன் நன்கு பேசும் ஆற்றலைப் பெற்றான். பெற்றோர்களும் ஒன்பது சவரன் எடையுடைய பொன்தாளம் செய்து ஆலயத்திற்கு காணிக்கையாக அளித்துள்ளார்கள். கோலக்கா அர்ச்சகர் இன்றும் அங்கு செல்லும் அனைவரிடமும் அந்தப் பொற்றாளத்தைக் காண்பித்தும் வரலாற்றினைக் கூறியும் மகிழ்கிறார். வேண்டியவர்கள் இவ்வுண்மையை இந்த அர்ச்சகர்க்குகடிதம் எழுதி அறிந்து மகிழலாம்.

6) திருநனிபள்ளியில் பாலை நிலத்தை வளம் பொருந்திய நெய்தல் நிலமாக மாற்றியது தமிழ் வேதம்.

7) முத்துச்சிவிகை, முத்துக்குடை, ஆகியவற்றைப் பெற்றுத் தந்தது. (நெய்வாயில் அரத்துறையில்)

8) முயலகன் என்னும் வாதநோய், படை, சொரி, பனிநோய், தீராத சூலைநோய், ஜ்வரம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை உடையவை நமது திருமுறைகள்.

9) எடுக்க எடுக்க குறையாத உலவாக்கிழியைப் பெற்றுத் தந்தது. தினமும் பொற்காசு பெற்றுத் தந்தது. (திருவாவடுதுறை, திருவீழிமிழலை)

10) செங்கல்லைத் தங்கமாக்கியது. (சுந்தரர் பொருட்டு திருப்புகலூரில்)

11) பாம்பு தீண்டிய வணிகனையும் (திருமருகல்) அப்பூதி அடிகளாரின் மூத்தமகனையும் உயிர்பெற்றெழச் செய்தது. (இறந்தாரை எழுப்பும் திறம் வாய்ந்தது)

12) வடமொழி வேதங்கள் பூட்டிய ஆலயக்கதவினை (திருமறைக்காடு) திறக்கச் செய்தது.

13) தண்ணீரில் எதிர்த்து வரும் தகைமை பெற்றது.

14) கூன்பாண்டியனுடைய தீராத வெப்பு நோயினைத் தீர்த்தது. அவனது உடம்பிலிருந்து ஊனத்தையும் நீக்கியது.

15) ஆற்று வெள்ளத்தில் ஓடத்தை ஓட்டும் ஓடக்காரன் இல்லாமலேயே ஓடத்தைச் செலுத்தியது. (கொள்ளம் பூதூர்)

16) சிவனருட் செல்வர்களைப் பரிகசித்தவர்கள் தலையில் இடிவிழச் செய்தது. (போதிமங்கையில் புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்தது)

17) ஆண்பனைமரம் பெண்பனைமரமாகியது. நமது திருமுறை (தமிழ்வேத) ஓலியலைகளால் மரத்தின் ஊனமே நீங்கியது எனில் நம்முடைய ஊனம் பிறவிப்பிணி தீயிலிட்ட பஞ்சுபோல் அழிந்தொழியும் என்பது சொல்லாமலே விளங்கும்.

18) அதி வெப்பமுடைய நீற்றறையை தென்றலாகக் குளிரச் செய்தது.

19) விடத்தினை அமுதமாக்கியது (அப்பர்)

20) சினமிகுந்த மதயானையைப் பணிய வைத்தது (அப்பர்)

21) கல்லையும் கடலில் மிதக்கச் செய்து கரையேற்றியது நமது திருமுறைகள் எனில் நம்மை இப்பிறவிக் கடலில் இருந்து முத்தி எனும் கரைசேர்ப்பது மிக எளிது என்று நாம் உணரலாம்.

22) பொதி சோறு பெற்றுத் தந்தது.

23) நெருப்பில் வேகாமல் இருக்கும் வல்லமை உடையது.

24) ‘பித்தா’ என்றும், ‘உலகெலாம்’ என்றும், ‘தில்லை வாழ் அந்தணர்’ என்றும் இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப் பட்டு பாடப்பட்டவை நமது திருமுறைகள்.

25) மூவர்கள், தேவர்கள், மற்றும் யாவரும் சிவபெருமானைத் தேடிச் செல்கிறார்கள். ஆனால் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் இறைவன் அடியார்களைத் தேடிவந்தார்.

26) நமது திருமுறைகள் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு வேண்டும் பொழுதெல்லாம் பொற்காசுகளைப் பெற்றுத் தந்தன.

27) திருமுது குன்றத்தில் உள்ள மணிமுத்தாற்றில் போட்ட பொற்காசுகளைத் திருவாரூர் குளத்தில் கிடைக்கச் செய்தது.

28) இறைவன் வீடுதோறும் இரந்து உணவு கொண்டு வரும்படி செய்தது. (திருகச்சூரில்)

29) ஒளியிழந்த கண்களை ஒளிபெறச் செய்தன. (சுந்தரர்)

30) திருடுபோன பொருட்களை மீண்டும் பெற்றுத் தந்தன. (திருமுருகன் பூண்டி)

31) காவிரி ஆற்றின் வெள்ளம் விலகி வழிவிடச் செய்தது.

32) மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மூவேந்தர்களையும் பணியச் செய்தன.

33) முதலையுண்ட பாலனை சில ஆண்டுகள் கழித்து வெளியே உயிருடன் உமிழச் செய்தன.

34) ஊமைப் பெண்ணைப் பேசும்படி செய்தது.

35) தில்லையில் ஓடாத தேரினை ஓடும்படி செய்தன (சேந்தனாரின் திருப்பல்லாண்டு)

36) இறைவனே தன் திருக்கரங்களால் எழுதும் பெருமையைப் பெற்றவை நமது திருமுறைகள்.

பிற மொழிகளில் உள்ள நூல்கள், மந்திரங்கள் யாவும் இறைவனை அடையும் வழிகளைச் சொல்லும். ஆனால் நமது திருமுறைகள் இறைவனை நம்பால் கொண்டு சேர்க்கும்.

'தேவாரம்' (தே + வாரம்) இறைவன் மீது அன்பு உண்டாகச் செய்வது என்பது பொருள். அன்பு தோன்றுமிடம் மனம் மனதை மலருக்கு ஒப்பிடுவது ஆன்றோர் வழக்கு. பட்டினத்துப் பிள்ளையாரும் பதினொராம் திருமுறையில் என் சிந்தைத் தாமரை என்று கூறியிருப்பதை அறியலாம்.

அடியார்களின் மனமாகிய மலரில் உள்ள அன்பு எனும் தேனை உண்டாகச் செய்வது நமது திருமுறைகளே ஆகும். இந்த அன்பு எனும்தேனைப் பருகுவதற்கு இறைவனாகிய வண்டு மலர்களைத் தேடி (அடியாரின் மனங்களைத் தேடி) வருவது தான் உலக நியாயம்.

இறைவன் அன்பெனும் பிடியுள் அகப்படும்மலை. அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடல். அன்பெனும் வலைக்குட்படுபரம் பொருள் ஆவர். இப்படி இறைவனை அடியர்களிடம் வரும்படிச் செய்பவை நமது தமிழ் வேதங்கள் (திருமுறைகள்) இதனையே திருவள்ளுவரும் மலர்மிசை யேகினான் என்று அருளி யுள்ளதால் அறியலாம்.

" அணி நாவல் ஆரூரன் சொன்ன அருந்தமிழ்கள்
இவை வல்லார் அமருலகு ஆள்பவரே"

திருச்சிற்றம்பலம்.

உ

# பாட்டு முதற் குறிப்பு

(எண்: பாட்டெண்)


அ

அகமலி அன்பொ 30
அங்கத்துறு 615
அங்கத்தை 332
அங்கமாய் 504
அங்கமும்வேத 13
அங்கமேபூண் 523
அங்கம் மொழி 613
அச்சமிலர் 17
அஞ்சியாகிலும் 379
அஞ்சினார்க்கர 568
அஞ்சினைஒன்றி 655
அஞ்சுகொலா 301
அஞ்சுமுகம்தோ 849
அட்டனழகாக 618
அடுத்தானையு 272
அண்டப்பகுதி 662
அண்டமாயாதி 271
அணடமேழன்று 477
அண்டர்பிரானு 867
அண்ணலேஎனை 870
அண்ணாமலையா 689
அணியனவுஞ் 422
அத்தாவுன் அடி 516
அதிராவினைகள் 482
அதுபழச்சுவை 743
அந்தணாளனுன் 579
அந்தம் இல்லா 628
அந்தாமரை 423
அந்திமதி 62
அந்தியும் நண்ப 631
அப்பன் நீ அம் 509
அம்மையே அப் 791
அயன் தலை 712
அரக்கனை 375
அரவணையான் 414
அரவொலி 657
அரியகாட்சி 216
அரியானை அந்த 411
அருணன் இந்தி 738
அருத்தமதாவது 109
அருநெறியமறை 11
அருந்துணையை 412
அரும்பித்த 417
அருவராதொரு 241
அருளாதொழி 754
அரைசனே அன் 759
அரைசேபொன் 751
அல்லலென்செ 363
அல்லிக்கமலத் 767
அல்லியம்பூம் 811
அல்லும் பகலு 495
அலைபுனல் ஆவ 177
அவ்வினைக்கு 66
அழுக்கு மெய் 578
அளவிலாப்பா 782
அற்புதத் தெய்வ 708
அற்றன்றியந் 225

அறிவானுந்தா 838
அறிவினால் மிக்க 587
அறுகெடுப்பார் 699
அன்பினாலடி 758
அன்பும் சிவமும் 825
அன்புறு சிந்தை 245
அன்றில் முட்டா 641
அன்றுந்திருவுரு 839
அன்றே என் 786
அன்னமாய்வி 807
அன்னம் 362
அன்னே இவை 678

ஆ

ஆக்கையாற்பய 280
ஆசைவன் 337
ஆட்சியுலகை 484
ஆட்டுவித்தால் 511
ஆட்பாலவர்க் 218
ஆடினாய்நறு 155
ஆடுகின்றிலை 668
ஆடும்மென 220
ஆணோ அலியோ 729
ஆதரமணொடு 253
ஆதியும் அந்த 672
ஆதியாய் நடுவு 864
ஆநந்தவெள் 801
ஆயம்பேடை 645
ஆர்த்தபிறவி 683
ஆரார் வந்தார் 818
ஆலந்தானுகந் 591
ஆவகை நாமும் 710
ஆவாகி 506
ஆளாகார் 392
ஆற்றலடல்வி 114
ஆறுகொலாமவ 302
ஆறேறுசென்னி 476
ஆனையுரித்தப 651

இ

இட்டனுன்னடி 565
இடரினுந்தளரி 167
இடர்களையா 837
இடர்கெடுத் 803
இடுக்கண்பட் 288
இடையறியேன் 635
இணையார் திரு 720
இந்திரன் 658
இந்திரியவய 775
இமையாதுயிரா 467
இயக்கர் கின்ன 584
இயமன் றூதரு 202
இரங்கும் நமக் 753
இரண்டுகொலா 298
இரந்திரந்துருக 762
இராவணன்மே 111
இருநிலனாய்த் 489
இருந்துசொல் 384
இல்லக விளக்கது 292
இலங்கைமன் 206
இலைமலிந்த 552
இறங்கிச் சென்று 622
இறவாத இன்ப 871
இறவாமேவரம் 431
இறுமாந்திருப் 283
இன்று நன்று 138

இன்றெனக்கரு 763
இன்னம் ஒரு 837
இன்னிசை வீணை 740

ஈ

ஈசற்கியான் 800
ஈறாய் முதலொ 16
ஈன்றாளுமாய் 350

உ

உகந்தானே 749
உங்கையிற் பிள் 690
உடலின் வினைக 474
உடையாளுன் 747
உணர்ந்தமாமு 760
உண்டாய் 103
உண்ணாதுறங் 470
உண்ணாமுலை 14
உண்ணினும் 175
உம்பர்கட் 790
உயர்ந்தேன்மனை 261
உயிராவணம் 434
உரியாயுல 476
உருத்தெரியா 777
உருவமும் 324
உருவளர்பவள 128
உரைமாலை 420
உலகம் உவப்ப 843
உலகெலாம்உ 859
உலகெலாம்தொழ 809
உலக்கைபல 700
உள்ளமாயுள் 448
உள்ளமுள்கி 388
உள்ளம்பெருங் 827
உற்றவர்க்குத 592
உற்றாராருள 282
உற்றாரையான் 794
உற்றிருந்தஉ 452
உன்னற்கரிய 731
உன்னை ஒழிய 848

ஊ

ஊராகிநின்ற 464
ஊழிதொறூழி 659
ஊனத்துறு 617
ஊனத்தை 343
ஊனமில்லா 627
ஊனாகி உயிராகி 492
ஊனாய் உயிரானாய் 538
ஊனில் உயிர்ப் 180

எ

எங்கேயென்னை 382
எங்கேனுமிருந் 544
எட்டிஇலவம் 834
எட்டுக்கொலா 304
எடுத்தவன் தரு 240
எண்ணிலாண் 879
எண்ணுகேன் 522
எண்மேலும் 477
எத்தாயர்எத் 491
எந்தையீசன் 137
எந்தையெந்தா 721
எயிலதுவட்டது 110
எல்லாஉலகமு 453
எல்லாம்சிவ 413

எல்லையில்புகழ் 567
எவரேனும் 490
எழுதுபாவை 397
எள்கல் இன்றி 600
என்பினால் 122
என்பொடுகொ 127
என்றும் இன்பம் 881
என்றும் நாம் 521
என்னபுண்ணி 139
என்னமாதவஞ் 387
என்னிலாரு 378
எனைத்தோரூழி 56

ஏ
ஏகநாயகனை 804
ஏசாநிற்பர் 752
ஏடுமலிகொன் 96
ஏடுவான் இளந் 564
ஏதநன்னிலம் 581
ஏதுக்களாலு 219
ஏர்தரும் 736
ஏலுந்தண்டா 252
ஏவலத்தால் 27
ஏழிசையாய் 575
ஏழுகொலாமவ 303
ஏறுகந்தீரிடு 248
ஏறுமால் 121
ஏற்றார்புரம் 539

ஐ
ஐந்துபேர் 862

ஒ
ஒண்ணித்தில 675
ஒரு காலத் 418
ஒருமை பெண் 5
ஒருவனையும் 531
ஒல்லையாறியுள் 34
ஒளிவளர் விளக்கே 802
ஒள்ளிதுள் 48
ஒன்பது 305
ஒன்றவன் 819
ஒன்றாவுலகனை 494
ஒன்றியிருந்து 345
ஒன்றுகண்டீர் 831
ஒன்றுகொலா 297
ஒன்றும் பலவும் 52

ஓ
ஓங்குமால்வரை 373
ஓசையொலி 451
ஓடேகலனுண் 19
ஓதிமாமலர்கள் 323
ஓதியஞானமும் 349
ஓதியோத்தறி 198
ஓம்பினேன்கூட் 119
ஓயாதேயுள்கு 693
ஓருருவாயினை 89
ஓரொருகால் 686
ஓவுநாளுணர் 566

க
கங்காளன் 826
கங்கையாடி 401
கஞ்சிமண்டை 208

| | |
|---|---|
| கட்டும்பாம்பும் | 366 |
| கடல்சூழ்ந்த உல | 559 |
| கடிசேர்ந்த | 221 |
| கடிதாய்க்கடற் | 548 |
| கடிதெனவந்த | 235 |
| கடையவனேனை | 671 |
| கண்காட்டு | 101 |
| கண்காள் | 274 |
| கண்ணப்பன் | 717 |
| கம்பமால்களிற் | 588 |
| கரவாடுவன் | 269 |
| கரியகறைக் | 614 |
| கருத்தனே | 196 |
| கருநட்டகண் | 344 |
| கருவாகிக்குழ | 435 |
| கருவாய்க் கிடந் | 352 |
| கருவுற்ற நாள் | 357 |
| கருவைக்கழி | 72 |
| கல்லாகி | 419 |
| கல்லாதபுல் | 778 |
| கல்லாமனத் | 692 |
| கல்லினோ | 386 |
| கல்லூர்ப்பெரு | 244 |
| கலவமாமயி | 165 |
| கலைபுனைமானுரி | 21 |
| கழியாய்க் | 640 |
| கழுமலமுது | 88 |
| கள்ளார்ந்த | 98 |
| கள்ளிமுது | 433 |
| கள்ளனேன் | 331 |
| கற்பகத்தினைக் | 606 |
| கற்பனைகடந்த | 865 |
| கற்றவர்களுண் | 441 |
| கற்றவர்விழுங் | 805 |
| கற்றாங்கெரி | 57 |
| கறைக்கண்டன் | 558 |
| கறையார்கடல் | 620 |
| கனமலர்க் | 23 |
| கனியினுங் | 376 |
| கனைத்தெழுந்த | 37 |

கா

| | |
|---|---|
| காக்கக்கடவிய | 851 |
| காசணிமின் | 698 |
| காசைசேர்குழ | 163 |
| காட்டுமாவது | 197 |
| காட்டூர்க்கடலே | 563 |
| காணவினியது | 107 |
| காத்தாள்பவர் | 259 |
| காதலாகிக் | 199 |
| காதார்குழை | 685 |
| காயமே | 334 |
| கார்வணன் | 186 |
| காருலாமலர்ச் | 372 |
| காருலாவிய | 162 |
| காரூர்கண்டத் | 649 |
| காரூர்புகலெய் | 541 |
| கால்களாற்பய | 281 |
| காலை சென்று | 404 |
| காவியங்கருங் | 157 |
| காவினை இட்டுங் | 67 |
| காழியான | 86 |
| காற்றாகி | 492 |
| கானநாடு | 405 |

கீ

| | |
|---|---|
| கீதத்தைமிகப் | 99 |
| கீதமினியகுயி | 735 |

கு

| | |
|---|---|
| குஞ்டலந்திகழ் | 594 |
| குண்டிகைக்கை | 113 |
| குணங்கள் பேசி | 310 |
| குரும்பைமுலை | 542 |
| குலங்கொடுத் | 430 |
| குலம்பொல் | 517 |
| குலம்பலம்பாவரு | 358 |
| குறிகளும்மடை | 395 |
| குறைவிலா | 761 |
| குற்றநீ குணங்க | 213 |
| குற்றமிலாதார் | 243 |
| குனித்த புருவ | 346 |
| குன்றம் எறிந்தது | 845 |
| குன்றம்எறிந்தாய் | 844 |
| குன்றினுச்சி | 43 |

கூ

| | |
|---|---|
| கூடவேடத்த | 406 |
| கூடுமாறருள் | 872 |
| கூவினபூங் | 739 |
| கூற்றாயினவாறு | 255 |
| கூறுகொண்டாய் | 42 |
| கூனற்றிங்கட் | 151 |

கே

| | |
|---|---|
| கேட்டாரும் | 667 |

கை

| | |
|---|---|
| கைகாள் கூப்பித் | 279 |
| கைப்போது | 270 |
| கையது வீழினும் | 171 |

கொ

| | |
|---|---|
| கொங்கலர்வன் | 182 |
| கொங்குசேர் | 164 |
| கொங்கை | 833 |
| கொச்சையண் | 87 |
| கொட்டும்பறை | 63 |
| கொடுவினையா | 415 |
| கொத்தலர் | 135 |
| கொல்வாரேனு | 203 |
| கொன்றுசெய்த | 621 |

கோ

| | |
|---|---|
| கோடிதீர்த | 408 |
| கோணாகணை | 61 |
| கோணியபிறை | 573 |
| கோலமாயநீண் | 214 |
| கோலமால் | 583 |
| கோலவரை | 732 |
| கோவாய்முடுகி | 356 |
| கோழிசிலம்பச் | 679 |

ச

| | |
|---|---|
| சங்கநிதிபதும | 518 |
| சங்கம் அரற் | 707 |
| சங்கரனே நின் | 446 |
| சடைமுயங்கு | 07 |
| சடையாயெனு | 93 |
| சந்தமாரகில் | 194 |
| சலமிலன் | 290 |
| சலம்பூவொடு | 260 |

சா
சாக்கியப்பட்டும் 74
சாதலும் 589
சாதிகுலம்பிறப் 779
சாத்திரம்பல 383
சாரணன் 572

சி
சிட்டபபட 249
சிந்தித்தென் 598
சிந்தனைநின் 666
சிந்திப்பரியன 348
சிரிப்பார்களிப் 755
சில்லுருவாய்ச் 465
சிவசிவ என்கிலர் 830
சிவனடியேசிந் 874
சிவனெனு 361
சிவனொடொக் 820
சிறையாருமடக் 49
சிறைவான் 799

சீ
சீரார்பவள 725
சீருந்திருவுந் 815

சு
சுடர்மணி 81
சுடுவார்பொடி 612
சுண்ணவெண் 265
சுந்தரநீறணிந் 697

சூ
சூடகந் தோள் 701
சூடுமதியம் 835
சூடுமிளந்திங் 64

செ
செங்கணவன் 688
செடிகள் 120
செய்ஞ்ஞின்ற 342
செந்தண் 642
செந்துவர் 313
செப்பிளமுலை 122
செம்பொனேர் 571
செம்மைநலம் 797
செய்யமலர் 479
செய்யனே திரு 316
செய்யாய் 483
செய்வினை 636
செருக்குவாய்ப் 83
செருந்திசெம் 648
செல்வநெடு 60
செவிகாள் 275
சென்றகாலத் 875

சொ
சொல்லாண்ட 814
சொல்லும் 841
சொல்லுவதறி 866
சொற்றுணை 285
சொன்மாலை 295

சோ
சோதிமுத்தின் 877
சோதியாய்த் 765
சோதியேசுட 770

ஞா
ஞானக்கரும் 709
ஞானத்தின்திரு 876

த

| | |
|---|---|
| தக்கிருந்தீர் | 251 |
| தசமுகனெரி | 85 |
| தஞ்சமென்றுன் | 211 |
| தண்ணளிவெண் | 860 |
| தண்ணார்மதி | 537 |
| தந்ததுன்தன்னை | 766 |
| தந்தைதாய் | 123 |
| தந்தையார் | 488 |
| தந்தையார் போயி | 116 |
| தம்மானையறி | 550 |
| தம்மையே | 549 |
| தரிக்கிலேன் | 669 |
| தருமணலோ | 245 |
| தலையேநீ வணங் | 273 |
| தன்னடைந் | 97 |

தா

| | |
|---|---|
| தாதையை | 817 |
| தாணுதல் செய் | 9 |
| தாயினும் நல்ல | 238 |
| தானெனை முன் | 650 |
| தாதார்கொன்றை | 53 |

தி

| | |
|---|---|
| திங்கள் தங்கிய | 590 |
| திடமலிமதி | 229 |
| திரியும் முப்புர | 593 |
| திருக்கோயிலில் | 513 |
| திருநாமமஞ்செ | 514 |
| திருநின்ற செம் | 554 |
| திருந்தாவ | 355 |
| திருமகட்குச் | 419 |
| திருமணியைத் | 438 |
| திருமாலும் | 718 |
| திருவளர்தா | 798 |
| திருவாக்கும் | 854 |
| திருவும் மெய்ப் | 607 |
| திருவும் வண்மை | 594 |
| திருவே யென் | 456 |
| தில்லைமூதூரா | 661 |
| தில்லை வா[illegible] | 551 |
| தினைத்தனை | 710 |
| தினைத்தனையோர் | 454 |
| தினைத்தாள் | 644 |

தீ

| | |
|---|---|
| தீயாகி | 493 |
| தீயினும் வெய் | 821 |
| தீர்த்தனைச் | 365 |

து

| | |
|---|---|
| துஞ்சலுந் துஞ்ச | 178 |
| துஞ்சவருவாரு | 31 |
| துஞ்சிருள் காலை | 329 |
| துணிவளர்திங்க | 20 |
| தும்மலோடருந் | 170 |
| தும்மல் இருமல் | 183 |
| துருத்தியுறை | 642 |
| துன்பநும்மைத் | 315 |
| துன்னஞ்சேர் | 530 |

தூ

| | |
|---|---|
| தூண்டுசுடர | 432 |

தெ

தெங்குலவு 733
தெண்ணிலா 863
தெருளாதார் 525
தெள்ளிய 230
தென்னிலங்கை 147

தே

தேடிக்கண்டு 284
தேமாங்கனி 15
தேம்பனுண் 166
தேவார்ந்த 528
தேனகமாமலர் 711
தேனமர் 136

தொ

தொண்டரஞ்சு 151
தொண்டனேன் 325
தொழுமாறு 94

தோ

தோடுடைய 01

ந

நக்கீரர்தாம் 853
நங்கடம்பனை 377
நஞ்சணிகண் 130
நஞ்சமர் கண்ட 728
நஞ்சுடையகண் 445
நடக்கிற்படி 840
நடநண்ணி 95
நடலைவாழ்வு 393
நணியார் 308
நத்தார்படை 611
நந்திநாம 209
நம்புவாரவர் 200
நமச்சிவாய 660
நமச்சிவாயவே 391
நரகமேழ்புக 205
நல்காதொழி 756
நல்லர் ஆற்ற 144
நல்லவர் தீயர் 181
நல்லார்கள் 226
நற்பதத்தார் 512
நற்றமிழ்ஞான 188
நற்றமிழ்வல்ல 581
நறும்பொழிற் 254
நறுமலராய் 421
நறுமாமலர் 458
நன்மை பெரு 868
நன்றுடையானை 65
நன்றுநாடொறு 380
நன்றுநோற் 407
நனவினுங்கன 169

நா

நாணொடு கூடிய 29
நாமார்க்குங் 520
நாயிற்கடைப் 722
நாயிற் கடையாம் 787
நாயேன் பல 533
நாலுகொலா 300
நாளாய 50
நாளும் 603
நாற்றமலர் 73
நானேபிறந்து 856

நானேயோத 793
நான் பெற்ற 823
நான் முகன் 663

நி
நிணங்குடர் 117
நிருத்தனே 771
நிரைகழலரவ 234
நில்லாதநீர் 435
நிலவெண்சங் 311
நிலைகெடவிண் 650
நிலைபெறுமா 439
நிறைவெண் 59
நீதியால் வாழ்கிலை 118
நின் அடியே வழி 38
நின்றவினை 632
நின்றுணுஞ்சம 242
நின்னாவார்பிற 515
நினைந்துருகும் 425

நீ
நீடவல்ல 46
நீதியால் 118
நீதியைநிறை 369
நீர்பரந்தநிமிர் 3
நீராகி நீள் 507
நீரேறுசெஞ் 526
நீலநெய்தல் 153
நீள நினைந்தடி 543
நீள நின்று 623
நீறுசேர்வ 91
நீறுதாங்கிய 604
நீறுமெய் பூச 267
நீறுமெய் பூசி 25

நெ
நெக்கு நெக்கு 398
நெக்குளார்வ 201
நெஞ்சமுமக்கே 256
நெஞ்சேநீ 278
நெடியவிசும் 469
நெடியமால் 124
நெய்யாடிநின் 529
நெறியல்லா 796

நை
நையாதமனத் 806

ப
பங்கயம் ஆயி 724
பட்டராகிலென் 402
படைக்கலமாக 347
பண்டு செய்த 381
பண்டுநால்வ 146
பண்டேநின் 546
பண்ணியன் 160
பண்ணினேர் 374
பண்ணின்இசை 466
பணித்தாரன 257
பத்தராய்ப் 560
பத்தரோடு 12
பத்தனாய்ப் 317
பத்திமை 574
பத்திமையும்பரி 781
பத்தியாய் 810
பத்துக்கொலா 306
பத்தூர்புக் 562
பதிபசுபாசம் 829
பந்துசேர்விர 156

| | |
|---|---|
| பப்பறவீட்டி | 742 |
| பரங்குன்றிற் | 852 |
| பரவும்பரி | 600 |
| பரிந்துநன் | 239 |
| பல்லின் | 630 |
| பல்லிதழ் | 125 |
| பலபல வேட | 134 |
| பழித்திளங் | 237 |
| பவணமாய்ச | 115 |
| பற்றிநின்றபா | 440 |
| பறப்பைப்படுத் | 58 |
| பனித்திளங் | 236 |
| பனைக்கை | 364 |

பா

| | |
|---|---|
| பாங்கினல்லார் | 40 |
| பாங்கினோடு | 783 |
| பாசம்பரஞ் | 673 |
| பாட அடியார் | 493 |
| பாடல் வீணையர் | 141 |
| பாடினார் அரு | 193 |
| பாடுவார்பசி | 547 |
| பாட்டான | 481 |
| பாதம் பணி | 536 |
| பாதாளம் | 681 |
| பார்பதம் அண் | 764 |
| பாராழிவட்டம் | 223 |
| பாருருஅரவல் | 638 |
| பாரூர் | 316 |
| பாரொடு | 768 |
| பால்நினைந்தூ | 792 |
| பாலனாய்க் | 326 |
| பாலுக்குப்பால் | 816 |
| பாவநாசா உன் | 769 |
| பாவமும் பழி | 400 |
| பாளையுடைக் | 339 |

பி

| | |
|---|---|
| பிச்சாடல்பே | 461 |
| பிடியதனுரு | 76 |
| பிடியெலாம் | 192 |
| பிணக்கிலாத | 773 |
| பித்தனைப் | 368 |
| பித்தாபிறை | 532 |
| பித்தொடு | 176 |
| பிறவியால் வருவன | 119 |
| பிரமபுரத்துறை | 77 |
| பிரமன்தன் | 450 |
| பிழைகள்தீரக் | 629 |
| பிழையுளன | 634 |
| பிறந்தபிறவி | 75 |
| பிறந்துமொழி | 836 |
| பிறவிதனை | 780 |
| பின்னைநின்றெ | 822 |

பீ

| | |
|---|---|
| பீரடைந்த | 32 |

பு

| | |
|---|---|
| புடையினார் | 154 |
| புண்டரிகத்த | 79 |
| புண்ணியனே | 858 |
| புத்தராய்ச்சில | 149 |
| புத்தரோடு | 10 |
| புத்தர்சமண் | 187 |
| புலர்ந்தகால் | 328 |
| புலனைந்தும் | 90 |
| புலைகள் தீரத் | 625 |

புவனியிற் 746
புழுவாய்ப்பிறக் 353
புற்றில்வாளர 602
புற்றில்வாள் 789

பூ

பூக்கைக் 394
பூசவினியது 108
பூசுரர்சேர் 82
பூசுவதும் 718
பூதங்கள் ஐ 784
பூதங்கள் தோ 741
பூத்தேர்ந்தா 47
பூவார்ந்த 449
பூவார்மலர் 54
பூவியல்வார் 696
பூவினுக்கருங் 286
பூவுளானும் 148
பூவேறு 715

பெ

பெண்டிர் 35
பெண்ணொர்பா 142
பெருகலாந் 389
பெருகியலைக் 478
பெரும்புலர் 318
பெறுதற்கரிய 828
பெற்றபயன் 842
பெற்றம் ஏறு 601

பே

பேயடையா 102
பேயோடே 647
பேராயிரம் 459
பேரிடர் 174
பேழைவார் 145

பை

பைங்குவளைக் 684
பையரவக்கச் 524
பையராவரு 158

பொ

பொங்கிளநாக 26
பொடிகொள் 143
பொய்மாயப் 437
பொய்யடிமை 557
பொருவுடை 340
பொறியிலா 321
பொறையுடைய 471
பொன்போல 263
பொன்னடி 84
பொன்னார் திரு 359
பொன்னார் 545
பொன்னியலும் 444
பொன்னும் 590

போ

போகமார்த்த 33
போதன் 207
போதையார் 190
போர்த்தநீள் 585
போர்த்தாயங் 264
போற்றி அருளுக 691
போற்றி என் 737
போற்றிசைத் 489
போற்றியோம் 670

ம

| | |
|---|---|
| மங்கையர்க் கரசி | 232 |
| மங்கையர்க்குத் | 880 |
| மஞ்சைப் | 55 |
| மடமுடைய | 626 |
| மடித்தாடும் | 637 |
| மடையில் | 18 |
| மட்டிட்ட | 100 |
| மண்ணாகி | 490 |
| மண்ணிலல்ல | 189 |
| மண்ணினிற் | 878 |
| மண்ணுலகிற் | 654 |
| மண்பாதலம் | 354 |
| மதிநுதல் | 129 |
| மதிமலிபுரிசை | 832 |
| மந்தரம்மன | 204 |
| மந்திரநான் | 179 |
| மந்திரமாவது | 104 |
| மந்திரம் ஒன் | 652 |
| மருந்தவைமந் | 228 |
| மருந்துவேண் | 191 |
| மருவார் | 577 |
| மருவார்புர | 462 |
| மலங்கிலேன் | 774 |
| மலைபுரிந்த | 39 |
| மலையான் | 443 |
| மழுவாள் வலன் | 540 |
| மற்றிணைஇல்லா | 70 |
| மற்றுநற்றவம் | 409 |
| மற்றுநீ வன்மை | 861 |
| மற்றுப்பற் | 564 |
| மறக்குமனத் | 71 |
| மறிகடலும் | 505 |
| மறைகலந்த | 6 |
| மறைகளாயின | 609 |
| மறையுடையாய் | 36 |
| மன்னிய சீர் | 561 |
| மன்னுகதில்லை | 812 |
| மன்னேமறவா | 534 |
| மனத்தகத் | 424 |
| மனமெனும் | 320 |
| மனைவிதாய் | 330 |

மா

| | |
|---|---|
| மாசில் வீணை | 390 |
| மாடுநகை | 705 |
| மாடெலாமண | 150 |
| மாணிபால் | 367 |
| மாதர்ப்பிறைக் | 260 |
| மாதர்மடப் | 92 |
| மாதாடுபாகத் | 730 |
| மாதா பிதாவாகி | 495 |
| மாந்தர்தம் | 24 |
| மாப்பிணைதழு | 294 |
| மாயிருஞால | 322 |
| மார்பாரப் | 869 |
| மாலறியா | 676 |
| மாலாகி | 508 |
| மாலாயவனும் | 224 |
| மாலையெழுந்த | 473 |
| மாலொடயன் | 112 |
| மாறிநின் | 757 |
| மாற்றேன் | 457 |
| மானினேர் விழி | 195 |
| மானேநீ | 677 |

மி

மிண்டுமனத் 813

மின்னிடை 707

மீ

மீளா அடிமை 639

மு

முடிகள் 314

முடியேன் 535

முடியார்சடை 488

முத்தணி 704

முத்தனேமு 672

முத்திதருவது 106

முந்தியமுதல் 744

முத்தன்ன 674

முத்தாமுத்தி 576

முத்திநெறியறி 795

முத்துநல்தாமம் 695

முத்துவிதான 307

மும்மையால் 553

முருகனே 850

முலைத்தடம் 68

முழுதும் 371

முழுமுதலே 750

முளைத்தானை 428

முள்ளிநாண் 159

முற்றலாமை 2

முன்பாகிநின்ற 472

முன்னம் அடி 258

முன்னம் அவனு 436

முன்னிக் 687

முன்னியாய் 485

முன்னின்று 748

முன்னீறும் 727

முன்னெறி 293

முன்னைப்பழம் 682

மூ

மூக்கே நீ 276

மூரிமுழங்கொலி 486

மூவரென இருவ 618

மூவாய் பிற 468

மூவெயில் 586

மூன்றங் கிலங் 726

மூன்றுகொலா 299

மெ

மெய்தான 670

மெய்ம்மையா 333

மெய்யெலாம் 268

மே

மேகத்தகண் 250

மேலது நான் 28

மேல்வைத்த 480

மை

மைகொள் 370

மைசேர்ந்த 475

மைப்படிந்த 519

மையமர்கண் 706

மொ

மொய்யார் 682

யா

யாவர்க்குமாம் 824

யாழைப்பழித் 608

வ

வங்கமலிகடல் 442
வஞ்சகப்புலை 335
வஞ்சித்தென் 296
வடியுடை 633
வடியேறுதிரி 427
வட்டமலர்க் 713
வணங்கத்தலை 723
வண்டமரோதி 185
வம்பறாவரி 555
வம்புலவு 447
வரங்கள்பெற்று 599
வலித்தேன்மனை 242
வல்லியந்தோ 247
வளையார் 857

வா

வாட்டடங் 702
வாணிலாமதி 161
வாயானை 429
வாயே வாழ் 277
வார்கொண்ட 556
வாழினுஞ் 168
வாழ்க அந்தண 215
வாழ்த்தவாயு 396
வாள்வரியதள 131
வாழ்வைஉகந் 653
வானத்தார் 463
வானந்துளங்கி 360
வானவன் காண் 487

வி

விநாயகனே 855
விண்டலர் 78
விண்ணவர் 597
விண்ணகத் 745
விண்ணாளுந் 694
விண்ணுலகாள் 69
விண்ணுறவடுக் 287
விண்மகிழ்ந்த 4
வித்தாம்முளை 426
விம்மாவெரு 312
வியரிலங்குவரை 8
விரிசடையாய் 527
விருதுகுன்றமா 140
விருத்தனாகிப் 41
விரும்பி 570
விள்ளத்தான் 336
விளக்கினார் 338
விளங்கொளி 80
விறகிற்றீயினன் 399
விற்றுக்கொள் 640
வினைப்பிறவி 776

வீ

வீடலாலவாயி 212
வீடினாருலகி 291
வீடுபிறப்பை 184
வீதிகடோறும் 309
வீரவேல்தாரை 846

வெ

வெஞ்சுடராடு 22
வெஞ்சொற் 45
வெந்தசாம்ப 217
வெந்தநீற்ருங் 289
வெந்துயர் 172
வெப்பொடு 173

| | |
|---|---|
| வெம்பவருகிற்ப | 510 |
| வெய்யவினை | 615 |
| வெல்லும் | 595 |
| வெளிறுதீரத் | 624 |
| வெள்ளநீர் | 327 |
| வெள்ளந்தாழ் | 665 |
| வெற்றுவேயடி | 233 |

வே

| | |
|---|---|
| வேண்டத்தக்க | 785 |
| வேண்டேன்பு | 788 |
| வேத்திலுள் | 105 |
| வேதநாயகன் | 410 |
| வேதநெறி | 873 |
| வேயனையதோளு | 244 |
| வேதமுதல்வன் | 222 |
| வேதமும் | 714 |
| வேதமொழியர் | 734 |
| வேதமோதிலெ | 403 |
| வேதமோதி | 51 |
| வேத வேள்வி | 331 |
| வேயுறுதோளி | 126 |
| வேழவெண்கொ | 44 |
| வேள்படவிழி | 133 |
| வேற்றாகி விண் | 460 |

வை

| | |
|---|---|
| வைத்தபொரு | 351 |
| வைச்சபொரு | 341 |
| வைத்தமாடும் | 385 |
| வைதெழுவார் | 416 |
| வையகமுற்று | 580 |
| வையகம் எல் | 703 |

The Sivathondan Society Ltd.
Jaffna.

9 789550 074082